

Youth Ministry

09



முழு உலகத்திற்கும் ஆசீர்வாதமான இலங்கை தேசம்!

13

விடுதலைப் பெருவிழா

20



THMC

ஆசீர்வாதம்

"உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன்"

மேன்மையின் ஆண்டு 2012

இதழ் 23 | ஜுன் 2012 | றொறன்ரோ அறுவடை மிஷனறி சபை | காலாண்டுப் பத்திரிகை

வானமும் பூமியும் ஒழிந்து போகும்... என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை!

நாஸ்திகர் மாநாடு ஒன்று நடந்தது. தாங்கள் எழுதிய "தேவன் இல்லை என்று மறுக்கும்" அநேக தத்துவ நூல்களை ஒவ்வொருவரும் முன்னே சென்று மேசையின் மேல் வைத்தார்கள். இதை ஒரு தேவ பக்தன் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, எல்லாப் புத்தகங்களுக்கும் மேலாக தன் வேத புத்தகத்தை வைத்து வேத புத்தகமே தலை சிறந்த உன்னதமான நூல் என்றார்.

நாத்திகன் ஒருவருக்கு இது பொறுக்கவில்லை. அவன் அந்த வேத புத்தகத்தை எடுத்து எல்லா புத்தகங்களுக்கும் அடியில் வைத்தான். அப்பொழுது தேவ பக்தன் கோபப்படாமல் நான் வேத புத்தகம் தலையான புத்தகம் என்று மேலே வைத்தேன். ஆனால் இந்த சகோதரனோ வேத புத்தகமே மற்ற எல்லா புத்தகங்களுக்கும் அடிப்படையானது ஆதாரமானது அஸ்திபாரமானது என்பதை விளங்க வைக்க எல்லாவற்றிற்கும் அடியில் வைத்திருக்கிறர் என்றார்.

வெட்கத்தால் தலை குனிந்த நாஸ்திகன் வேதத்தை எடுத்து புத்தகங்களின் நடுவே வைத்தான். அப்பொழுது பக்தன் சிரித்துக் கொண்டே வேதம் அச்சு ஆணி போன்றது. வேதத்தை மையமாகக் கொண்டே உலகம் முழுவதும் இயங்குகிறது. சகல ஞானங்களுக்கும் மையக்கருத்து வேதத்திலேயே இருக்கிறது என்று சொன்னார்.

தாவீது இவ்வாறு சொல்கின்றான்: உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்.

கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில நிலைத்திருக்கிறது. உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள், என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை.

அல்லேலூயா!

மேன்மையின் ஆண்டு-2012

உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்



இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்.

உபா. 28 : 1

இந்த வருடத்திலே சகல ஜாதிகளிலிலும், உங்களை மேன்மையாக வைப்பேன் என்று தேவன் வாக்குக் கொடுத்திருக்கிறார். வரும்நாட்களில் தேவன் உங்கள் பொருளாதாரங்களில் மேன்மைப்படுத்துவார். குடும்பத்தை மேன்மைப்படுத்துவார். வேலை செய்யும் இடங்களில் மேன்மைப்படுத்துவார். நல்ல ஆரோக்கியத்தை தந்து உங்களை மேன்மைப்படுத்துவார். உங்கள் பிள்ளைகளை மேன்மைப்படுத்துவார். எப்படி அவர் உங்களை மேன்மைப்படுத்த முடியும் என்று நான் தேவனிடத்தில் ஜெபித்தபோது, அவர் உங்களை மேன்மைப்படுத்த நீங்கள் செய்ய வேண்டிய ஐந்து காரியங்களைக் குறித்து ஆண்டவர் என்னோடு பேசினார், அதையே உங்களுக்கும் கற்றுக்கொடுக்கச் சொன்னார். அதன்படி நீங்கள் செய்யும்போது நிச்சயமாக தேவன் உங்களையும், உங்கள் குடும்பங்களையும் தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படியே மேன்மைப்படுத்துவார்.

ஆதி. 4ம் அதிகாரத்திலே ஒரு வசனத்திலே இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. **"நன்மை செய்தால் உனக்கு மேனமையில்லையோ?"** இந்த வார்த்தை ஆதாமின் மகனான காயீனைப் பார்த்து கர்த்தர் சொன்ன வார்த்தை. உங்களுடைய வாழ்க்கையிலே உங்கள் ஆத்துமாவுக்கு நீங்கள் கர்த்தருக்குள் நன்மை செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும். நீங்கள் உங்களுடைய ஆத்துமாவுக்கும், சரீரத்திற்கும் நன்மை செய்யும் பொழுது, அந்த நன்மைதான் உங்களை மேன்மைப்படுத்தும்.

ஒரு மனிதன் ஆண்டவர் இயேசுவினிடத்திலே வந்து "ஆண்டவரே கற்பனைகளிலே எது பிரதான கற்பனை?" என்று கேட்டான். அதற்கு இயேசு : தேவனாகிய கர்த்தரிடத்திலே பூரணமான பலத்தோடு விசுவாசித்து, அன்புகூரும்படி விளக்கம் கொடுத்தார். இதுவே பிரதானமான கற்பனை! என்றும் அதே நேரத்தில் **"நீ உன்னிடத்தில் அன்பு கூருகிறது போல,** பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" என்றும் கூறினார்.

எல்லா மனிதனும் தன்னிடத்தில் முதலாவது அன்புகூருகிறான். கொலை செய்கிறவனும்கூட தன்னை திருப்திப்படுத்துவதற்காகவே கொலை செய்கிறான். குடி, போதை வஸ்துக்கு

தொடர்ச்சி 3ம் பக்கம்





எமக்கு அன்பானவர்களே!

ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் கனடா, ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபையிலிருந்து வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

நம் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையால், நம் தேசத்தை நம் பட்டணத்தை கர்த்தர் எல்லா அழிவுக்கும் நாச மோசங்களுக்கும் தப்புவித்து பாதுகாத்து வருகின்றார். உலகத்தின் பல பகுதிகள் யுத்தங்களாலும் பஞ்சங்களாலும், வியாதிகளாலும், இயற்கை அழிவுகளாலும், பாதிக்கப்பட்டிருந்தாலும், இவ்விதமான எந்த பாதிப்பும் இல்லாமல் நம் தேவ பிள்ளைகள் வாழ்கிறதான பட்டணங்களை சேதப்படுத்தாதபடிக்கு கர்த்தர் பாதுகாத்தார்.

கடந்த வருடம் முழுவதுமாக தேவனுடைய கரம் எம்மோடே கூட இருந்தது. தமது ஊழியங்களை செய்யும்படியாக தேவன் நமக்கு உதவி செய்தார். ஊழியங்களுக்கு விரோதமாகவும், ஊழியம் செய்யும் தேவ பிள்ளைகளுக்கு விரோதமாகவும், குடும்பங்களுக்கு விரோதமாகவும், சத்துரு பல எதிர்ப்புக்களைக் கொண்டு வந்தான். எம்மைத் தாக்கி, சோர்வுபடுத்துவதற்கு முயன்றான். எனினும் அவை ஒன்றும் எங்கள் ஊழியங்களையோ, விசுவாசக் குடும்பங்களையோ, ஊழியர்களையோ சேதப்படுத்தாமல், கர்த்தர் கண்மணி போல பாதுகாத்தார்.


இலங்கை தேசம் வரப்போகின்ற 28 ஆண்டுகளில் பாவ, சாப, சூழ்நிலைகளால் பாதிக்கப்படவும், சோதோம் கொமோராவைப் பார்க்கிலும் மோசமான தேசமாக மாற, சாத்தான் வகை தேடுவான். ஆனாலும் தேவன் தம்மாலே தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் நிமித்தமாக அச்சூழ்நிலைகள் எல்லாவற்றிலும் இருந்து இலங்கை தேசத்தை விடுதலையாக்கி, வரவிருக்கும் 28 ஆண்டுகளுக்குள் இலங்கை தேசத்தை ஆசீர்வதித்து, முழு உலகிற்கும் இலங்கையை ஆசீர்வாதமாக்குவேன் என்று வாக்கு கொடுத்துள்ளார். இந்த தேவ திட்டம் நிறைவேற கர்த்தர் எம்மை உடனடியாகவே இலங்கைக்குச் சென்று, வரப்போகின்ற இரண்டு வருட காலத்துக்குள் இலங்கை தேச வாலிபர்களை சந்திக்கவும், விசுவாசிகளை சந்திக்கவும், தேச மக்களுக்கு சத்தியத்தை சொல்லவும் பொறுப்பைத் தந்துள்ளார். இதன்படியே கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் முதல்கொண்டு 2014ம் ஆண்டின் முடிவுக்கு முன் 25 மாவட்டங்களுக்கும் கடந்து செல்ல திட்டமிட்டிருக்கின்றோம். இதுவரை 8 மாவட்டங்களை சந்தித்து விட்டோம். இன்னும் 17 மாவட்டங்கள் சந்திக்கப்பட ஜெபம் பண்ணி வருகின்றோம்.


கடந்த வருடத்திலே கர்த்தருடைய கிருபையினால் “எஸ்தர் குழு” என்ற பெயரில் பெண்களுக்கான ஊழியத்தை துரிதமாய் ஸ்தாபிக்க கர்த்தர் கிருபை செய்தார். அப்படியே பல தேச, இன மக்கள் வந்து ஆராதிக்கும் வகையில் ஆங்கிலத்தில் ஆராதனையை ஆரம்பிக்கவும் தயை கூர்ந்தார். அத்துடன் இவ்வருடம் மொன்றியல் நகரத்தில் சபை ஒன்றை ஸ்தாபிக்கவும், மலேஷியாவில் இன்னுமொரு சபையை ஸ்தாபிக்கவும் கர்த்தரின் கரங்கள் உதவிற்று. இவை எல்லாவற்றுக்குமாக கர்த்தரை மேன்மைப்படுத்துவோமாக.

தொடர்ந்தும் இவ்வருடம் ரொறன்ரோவிலும், மொன்றியலிலும், பிராங்ஃபோர்ட்டிலும், மலேஷியா, இலங்கை, இந்தியா தேசங்களில் திட்டமிடப்படுகின்ற ஊழியங்கள் எல்லாம் துரிதமாய் செய்யப்பட தேவனுடைய கரம் இருக்கும்படிக்காய் ஜெபம் பண்ணுங்கள். விசேடமாக பிராங்போர்ட்டில் நடக்கவிருக்கும் விசேட ஆராதனைகளுக்காக ரொறன்ரோ தேசத்திலிருந்து கடந்து செல்லும் வாலிபர் குழுவினருக்காக ஜெபம் பண்ணுங்கள். நாங்களும் உங்களுக்காகவும், குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.

அன்புடன் கிறிஸ்துவின் பணியில்

பாஸ்டர் வின்சன்ட் சகாயநாதன்.





ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபையினால் இலவசமாய் வெளியிடப்படும் காலாண்டுப் பத்திரிகை.

தொடர்புகளுக்கு

Pastor Vincent Sahayanathan
1180 Bellamy Road
Scarborough, ON
M1H 1H2, Canada

416.438.5200
416.289.3662
Fax: 416.289.2775
e-mail: info@thmc.net

“Do not forget God. Think of Him often. Adore Him ceaselessly. Live and die with Him. That is the real business of Christians; in a World, it is our profession. If we do not know it, we must learn it.”

ஆங்கில ஆராதனை

ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபைக்கு கர்த்தர் தந்த தரிசனங்களில் ஆங்கில ஆராதனையும் ஒன்று., அனைவரின் நீண்ட கால விருப்பமும் கர்த்தர் எமது சபைக்குத் தந்த தரிசனத்தின் ஓர் வெளிப்பாடாக 2011, செப்ரெம்பர் 11ம் திகதி ஞாயிற்றக்கிழமை மகிழ்ச்சியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ஆராதனையானது இத்தேசத்தில் ஆங்கிலத்தை முதன்மையான மொழியாக கற்று வளரும் நம் எதிர்காலச் சந்ததிக்கு ஆசீர்வாதமாக இருப்பது மாத்திரமல்லாது, அனைத்து மொழி மக்களும் வந்து தேவனை ஆராதிக்கும் நோக்கத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில ஆராதனையானது பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் துதி ஆராதனையுடன் காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து, தேவ செய்தி மற்றும் ஜெபத்துடன் 10.30 மணிவரை நடைபெறுகிறது. இந்த ஆராதனையானது முற்று முழுதுமாக ஆங்கிலத்திலேயே நடத்தப்படுகின்றது. எனவே நீங்களும், உங்களுக்குத் தெரிந்த பிற மொழி நண்பர்களையும் அழைத்து வந்து, தேவ சமூகத்தில் ஆசீர்வதிக்கப்படுங்கள்.

Emergency Telephone Numbers

(அவசர தொலைபேசி இலக்கங்கள்)

These are more effective than 911

(இவை அவசர தொலைபேசி இலக்கங்களை விட முக்கியமானதும், வலிமையுள்ளதுமானவை)

When ????

You are sad,	Call **John 14**
You have sinned,	Call **Psalm 51**
You are facing danger	Call **Psalm 91**
People have failed you	Call **Psalm 27**
It feels as though God is far from you,	Call **Psalm 139**
Your faith needs stimulation,	Call **Hebrews 11**
You are alone and scared,	Call **Psalm 23**
You are worried, phone	Call 8:19-34
You are hurt and critical,	Call **1 Corinthians 13**
You wonder about Christianity,	Call **2 Corinthians 5:15-18**
You feel like an outcast,	Call **Romans 8:31-39**
You are seeking peace,	Call **Matthew 11:25-30**
It feels as if the world is bigger than God,	Call **Psalm 90**
You need Christ like insurance,	Call **Romans 8:1-30**
You are leaving home for a trip	Call **Psalm 121**
You are praying for yourself	Call **Psalm 87**
You require courage for a task	Call **Joshua 1**
Inflation's and investments are hogging your thoughts,	Call **Mark 10:17-31**
You are depressive,	Call **Psalm 27**
Your bank account is empty,	Call **Psalm 37**
You lose faith in mankind,	Call **1 Corinthians 13**
It looks like people are unfriendly,	Call **John 15**
You are losing hope,	Call **Psalm 126**
You feel the world is small compared to you,	Call **Psalm 19**
You want to carry fruit,	Call **John 15**
Paul's secret for happiness,	Call **Colossians 3:12-17**
With big opportunity/ discovery,	Call **Isaiah 55**
To get along with other people,	Call **Romans 12**

ALTERNATE NUMBERS

For dealing with fear,	Call **Psalm 47**
For security,	Call **Psalm 121:3**
For assurance,	Call **Mark 8:35**
For reassurance,	Call **Psalm 145:18**





மேன்மையின் ஆண்டு...

அடிமையானவனும்கூட தன்னை திருப்திப்படுத்துவதற்காகவே இவைகளைச் செய்கிறான். இப்படிச் செய்கிற மனிதனைப் பார்த்துதான் கர்த்தர் சொல்கிறார்: "உன்னுடைய ஆத்துமாவுக்கு நீ நன்மை செய்ய வேண்டும். நீ நன்மை செய்யும்போது, உனக்கு மேன்மை உண்டாகும்."

ஆகவேதான் உங்கள் வாழ்வை மேன்மைப்படுத்த தேவனுடைய ஆலோசனைகள் என்ன என்பதை உங்கள் வாழ்விலே அறிந்து, அதன்படி உங்கள் வாழ்க்கையை செயல்படுத்துவீர்களானால், நீங்கள் ஆத்துமாவுக்கு நன்மை செய்கிறீர்கள். இதினிமித்தமே தேவனுடைய மேன்மையை பெற்றுக்கொள்ளுவீர்கள். தேவன் உங்களை பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் மேன்மையாக வைப்பார்.

இந்த மேன்மையை அடைய நீங்கள் உங்கள் ஆத்துமாவுக்கு செய்ய வேண்டிய நன்மை என்ன?

முதலாவது காரியம்

நீங்கள் விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில் மேன்மைபாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு, ஆகிலும் தேவனுக்குமுன்பாக மேன்மைபாராட்ட ஏதுவில்லை. வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது.
ரோமர் 4 : 2-3

அதாவது ஆபிரகாம் தான் செய்த கிரியைகளினாலே மேன்மை பாராட்டப்படவில்லை. ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அதுதான் அவனுக்கு மேன்மையாக எண்ணப்பட்டது. ஆபிரகாமிடத்தில் தேவனைக் குறித்த விசுவாசம் இருந்தது. அவன் விசுவாசத்தில் நடந்தான். சூழ்நிலைகளை பார்க்கவில்லை. அதேபோல் உங்களுடைய வாழ்க்கை இந்த வருடத்திலே கர்த்தருக்கேற்ற விசுவாசத்திலே இருக்க வேண்டும். இந்த வருடத்திலே கர்த்தர் அதைக் கற்றுக்கொடுக்கும்பொழுது அந்த விசுவாசத்திலே வளர்ந்து கர்த்தரை நீங்கள் மகிமைப்படுத்த வேண்டும் அப்பொழுது அவர் உங்களை மேன்மைப்படுத்துவார்.

இது எப்படிப்பட்ட விசுவாசம்? இந்த விசுவாசத்தில் எப்படி செயல்பட வேண்டும்?

1 இராஜாக்கள் 17:13-16 - இந்த வேதப்பகுதியில் சாரிபாத் என்கின்ற ஊரில் இருந்த ஒரு விதவையைக் குறித்து கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தை கவனியுங்கள் : சாரிபாத் விதவை வாழ்ந்த காலத்தில் தேசத்திலே கொடிய பஞ்சம் உண்டாயிற்று. உணவு தட்டுப்பாடு மிகவும் அதிகமாய் இருந்தது. எலியாவை இந்த விதவை வீட்டுக்கு கர்த்தர் அனுப்பியபடி வந்தான். அவளிடத்தில் அந்த நேரத்தில் ஒரு கொஞ்ச பிடி மா மாத்திரமே இருந்தது. அவள் அந்த மாவில் அப்பம் சுட்டு தானும் தன் பிள்ளையும் சாப்பிடுவதற்கு ஆயத்தமாகிறாள். அந்த நேரத்தில் அவள் வீட்டுக்கு கடந்து வந்த தீர்க்கதரிசியாகிய எலியா சாரிபாத் விதவையைப் பார்த்து சொல்கிறான் : "பயப்படாதே, நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து, ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா, பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம். கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்துபோவதும் இல்லை, கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்" என்றான்.

அவன் வார்த்தையை அறிந்து அதில் உறுதியான நம்பிக்கையுடன் இருந்ததினால், எனக்கு நிலையான வீட்டைக் கட்டுவேன் என்று சொல்லியிருக்கிறீரே என்று உரிமை பாராட்டுகிறான்.

அவள் போய், எலியாவின் சொற்படியே செய்தாள். அதினிமித்தம் அவளும், அவள் பிள்ளைகளும், வீட்டாரும் பஞ்சம் முடியும்வரைக்கும் திருப்தியாய் சாப்பிட்டார்கள். கர்த்தர் தீர்க்கதரிசியாகிய எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்து போகவும் இல்லை, கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை. இந்த விதவை தேவ மனிதனுடைய வார்த்தையை விசுவாசித்து செயற்பட்டதன் நிமித்தம், ஆசீர்வதிக்கப்பட்டாள்.

விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமைக் குறித்து பார்க்கும்பொழுது : "விசுவாசத்தினால் மேன்மை வரும்" என்று ஆபிரகாம் பூரணமாய் நம்பினான். அதன்படி எல்லாவற்றிலும் தேவனுக்கு பிரியம் உண்டாகத்தக்க விசுவாசத்தில் நடந்து கொண்டான். அதைக் கண்ட தேவன் ஆபிரகாமை நீதிமான் என்று அழைத்து, ஆசீர்வதித்து மேன்மையை அவனுக்கு கொடுத்தார். ஆபிரகாமுக்கு இருந்த வேலைக்காரனாகிய எலியேசர் சொல்கிறான் : **"எனது எஜமானுடைய தேவன் என் எஜமானை சகலதிலும் ஆசீர்வதித்து மேன்மைப்படுத்தி வைத்திருக்கின்றார்."** என்று சாட்சி சொன்னான். எனவே ஆபிரகாம் விசுவாசித்தது போல நீங்களும் விசுவாசித்தால் உங்கள் விசுவாசம் உங்களை மேன்மைப்படுத்தும்.

2003ம் ஆண்டிலே எங்களுக்கு சொந்தமான கட்டிடம் இருக்கவில்லை. இன்னொரு சபை கட்டிடத்திலே கர்த்தரை ஆராதித்து வந்தோம். கட்டிடம் வாங்குவதற்காக முயற்சி செய்து, 1999ம் ஆண்டு முதல் நிதி சேகரிக்க தொடங்கினோம். மொத்தமாக 2003ம் ஆண்டு வரை சேகரிக்கப்பட்ட நிதியின் தொகை 19,000 டொலர்கள் மாத்திரமே! இந்நாட்களிலே புற தேசத்தில் இருக்கின்ற ஒரு திருச்சபை, கட்டிடத்தை கட்டுவதற்காக நிதி கேட்டு எழுதியிருந்தார்கள். அதை நாங்கள் கண்ட பட்சத்தில் அவர்களுக்கு கொடுத்து உதவும்படிக்கு கர்த்தர் ஏவினார். நாங்கள் சேகரித்து வைத்திருந்ததில் கொஞ்சத்தை அவர்களுக்கு அனுப்பி வைத்திருந்தோம். அது எங்கள் மனதுக்கு மிகவும் சமாதானமாக இருந்தது. இது 2003ம் ஆண்டு நடந்த சம்பவம். இச்சம்பவங்களுக்கு பின்னர் அதே ஆண்டில் கனடாவிலிருக்கின்ற இன்னொரு திருச்சபையார் நாங்கள் கட்டிடம் வாங்குவது குறித்து அறிந்து, இரண்டு லட்சம் டொலர்களை நன்கொடையாக எமக்குத் தந்தார்கள். இதைக் கண்ட சபையார், அதைப் பார்க்கிலும் இரண்டு மடங்காக தங்கள் நிதியைக் கொடுத்தார்கள். அதைக் கொண்டு உடனடியாகவே கர்த்தருக்காக நாங்கள் ஒரு கட்டிடத்தைப் பெற்றுக்கொண்டோம்.

1985ம் ஆண்டில் நான் ஐரோப்பாவில் வாழ்ந்து கொண்டிருந்தபோது, அரசாங்கமானது நாளாந்தர உணவையும், மாதாந்த கைச்செலவுக்காக 70DM ஐயும், கொடுத்து உதவினார்கள். அது எனக்கு எவ்வளவும் போதாத பணம். அந்நாட்களிலே கர்த்தருக்கு தசமபாகம் காணிக்கை கொடுக்க வேண்டும் என்பது குறித்து முதன் முதலாக கற்றுக்கொண்டேன். எனக்கு கிடைத்த 70 DM ஐயும் எவ்வளவேனும் என் வாழ்க்கைக்கு போதாததாகவும் மிகவும் குறைந்த தொகையாக இருந்தும், கர்த்தருடைய வார்த்தையின்படி தசமபாகம் காணிக்கை கொடுக்க வேண்டும் என்று அறிந்தவுடனேயே, அதற்குக் கீழ்ப்படிந்து, கொடுக்க வேண்டிய தொகையை கொடுத்தேன். அது என் உள்ளத்துக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. கொடுத்த அந்த மாதமே 700DM சம்பளம் பெறச்செய்து என் விசுவாசத்தை மேன்மைப்படுத்தினார்.

இதுதான் விசுவாசத்தினால் உண்டாகும் மேன்மை. நீங்கள் தேவனுடைய ஆலோசனையின்படி உங்கள் ஆத்துமாவுக்கு நன்மை செய்யும்போது நிச்சயம் மேன்மைவரும். இதுதான் ஆபிரகாமுக்கும் உண்டான மேன்மை.

இரண்டாவது காரியம் :

கர்த்தருடைய வார்த்தையிலே நாம் நிறைந்திருக்க வேண்டும்.

இந்த வருடத்திலே தேவனுடைய வார்த்தையிலே ஒவ்வொருவரும் நம்பிக்கை வைக்க வேண்டும். வார்த்தையை கற்றுக்கொள்ள வேண்டும். வார்த்தையை அறிந்து அதில் வளர வேண்டும். தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்வதிலும் அதிலே நம்பிக்கை வைப்பதிலும் அதிலே வளருகிறதிலும், தாவீதி ஓர் முன்மாதிரியான தேவ மனிதன்.

"தேவனே, இது இன்னும் உம்முடைய பார்வைக்குக் கொஞ்சக்காரியமாயிருக்கிறது என்று தேவனான கர்த்தராயிருக்கிற நீர் உமது அடியானுடைய வீட்டைக் குறித்து வெகுதூரமாயிருக்கும் காலத்துச் செய்தியையும் சொல்லி, என்னை மகா மேன்மையான சந்ததியின் மனுஷனாகப் பார்த்தீர்." (1 நாளா. 17 : 17)

தாவீதின் இருதயத்தை கவனியுங்கள். தேவன் தாவீதைக் குறித்து சாட்சி கொடுக்கையில்: "தன்னுடைய இருதயத்துக்கு ஒத்த தாசன்" என்கிறார். ஆடுகளை மேய்ப்பவனாக ஆடுகளுக்கு பின்னால் சென்றவனை, கர்த்தர் தெரிந்து, எல்லா பெரிய மனிதர்களுக்கும் ஒத்த ஒரு பெயரையும் புகழையும் கொடுத்து ராஜாவாக்கி, மேன்மைப்படுத்தினார். **அதற்கு காரணம் என்ன?** தாவீது சொல்கிறான் : "தேவனான கர்த்தராயிருக்கிற நீர் உமது அடியானுடைய வீட்டைக்குறித்து வெகுதூரமாயிருக்கும் காலத்துச் செய்தியை சொல்லியிருக்கிறீரே. என்னைக் குறித்து நீண்ட காலத்திற்கு பின்னர் நடக்கப்போகின்ற காரியத்தைக் குறித்து உம்முடைய வார்த்தைக்கூடாக கூறியிருக்கிறீரே" என்றான்.

தாவீது அவனுடைய கண்களுக்கு புலப்படாத காலத்துக்கும் ஆண்டவர் செய்யக்கூடியதான காரியங்களை, கர்த்தருடைய வார்த்தைகளுக்கூடாக படித்து அறிந்து கொண்டான். தேவன் தன்னை மேன்மைப்படுத்த விருப்பம் உள்ளவர் என்றும் அதற்கான வழிகளை எல்லாம் அவரே எழுதியுள்ளார் என்பதையும் நன்றாக புரிந்து கொண்டான். வார்த்தையில் நம்பிக்கை வைத்தான். தன்னுடைய வீட்டை கர்த்தருடைய வார்த்தையின்படி கட்ட ஒப்புக்கொடுத்தான். இதினிமித்தமே தேவன் அவனை பெரியவனாக உயர்த்தி தாவீதை மேன்மைப்படுத்தினார்.

1 நாளா. 17:23, 24ம் வசனத்தின்படி மேலும் தாவீது சொல்கிறதை கவனியுங்கள்: "இப்போதும் கர்த்தாவே, தேவரீர் அடியானையும் அவன் வீட்டையும் குறித்துச் சொன்ன வார்த்தை என்றென்றைக்கும் நிலைவரப்பட்டிருப்பதாக, தேவரீர் சொன்னபடியே செய்தருளும். ஆம், அது நிலைவரப்பட்டிருக்கவும், இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் இஸ்ரவேலுக்குத் தேவன் என்றும், உமது அடியானாகிய தாவீதின் வீடு உமக்கு முன்பாகத் திடமானதென்றும் சொல்லப்படுவதினால், உமது நாமம் என்றைக்கும் மகிமைப்படவும்கடவது" என்றான். அதாவது **அவன் வார்த்தையை அறிந்து அதில் உறுதியான நம்பிக்கையுடன் இருந்ததினால், எனக்கு நிலையான வீட்டைக் கட்டுவேன் என்று சொல்லியிருக்கிறீரே என்று உரிமை பாராட்டுகிறான்.** இதுதான் தேவன் தாவீதை மேன்மைப்படுத்த இன்னும் முக்கியமாக இடம் உண்டாக்கிற்று. அவருடைய வசனத்தின்படியே செய்தால், கட்டாயம் தேவன் அதை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை தாவீதுக்கு இருந்தது.

பிரியமானவர்களே! தேவனுடைய பார்வையில் நீங்களும் விஷேசமானவர்கள். தாவீதுக்கும் உங்களுக்கும் இடையில் தேவன் வித்தியாசம் வைக்கவேயில்லை. அதே வேதத்தையே தேவன் உங்களுக்கும் தந்திருக்கிறார். தாவீதை எப்படி உயர்த்துவேன் என்று வேதத்திலே எழுதி வைத்தாரோ, அப்படியே உங்களுடைய மேன்மையைப் பற்றியும் எழுதி வைத்துள்ளார்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்

மேன்மையின் ஆண்டு...

தாவீது அதை அறிந்தான். அதன்படி நடந்து கொண்டான். தேவன் அவனை உயர்த்த அது அவருக்கு ஏதுவாக இருந்தது. நீங்களும் அப்படியே தேவன் உங்களைப் பற்றி எழுதிய வார்த்தைகளை அறிந்து உங்கள் வாழ்வில் அதன்படி செய்ய தொடங்குவீர்களானால், அதுவே தேவன் உங்களை மேன்மைப்படுத்த வழியாக அமைந்து விடுகிறது. நீங்கள் ஒவ்வொருவரும் உயர்த்தப்பட முடியும். "உயர்த்தப்படுவேன்" என்ற விசுவாசம் அன்று தாவீதுக்குள் இருந்தது. அதன்படியே மேன்மையை அடைந்தான். அந்த வார்த்தை உங்களுக்குள்ளும் கிரியை செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஏனெனில் உங்களையும் தேவன் மேன்மைப்படுத்த விரும்புகிறார்.

நீங்களும் வேதத்தை வீட்டிலே நன்றாக தியானிக்க வேண்டும். சபையில் நடக்கும் வேதப்படிப்புகளில் வந்து கலந்து கொள்ள வேண்டும். சபை ஆராதனைகளில் வந்து கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் இந்த வருடம் இந்த வாக்குத்தத்தத்தை தந்த தேவன் அதை சபையில் இருக்கும் ஊழியர்களுக்கு தெரிவித்து அவர்களுக்கூடாக அதை நீங்கள் அறிந்து கொள்வதற்கும் நீங்கள் மேன்மைப்படுவதற்கும் வழிகளை தேவன் வைத்திருக்கிறார். **கர்த்தருடைய சத்தியத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால்,** இப்பொழுது நான் சொல்லும் ஆசீர்வாதங்கள் எல்லாம் உங்கள் வாழ்வில் கடந்து வந்து உங்களையும் மேன்மைப்படுத்தும். தாவீதை மேன்மைப்படுத்தியவர் நிச்சயம் உங்களையும் மேன்மைப்படுத்துவார்.

இயேசுவிடம் அநேக வியாதியஸ்தர்கள் கொண்டுவரப்பட்டார்கள். அப்படியே இயேசுவும் வியாதியஸ்தர்களிடத்திலே தானும் கடந்து சென்றார். அவர்கள் எல்லாரையும் இயேசு சுகமாக்கினார். ஒவ்வொரு வியாதியஸ்தர்களையும் சுகமாக்கிய ஆண்டவர் இயேசு, உன் பாவம் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். அத்தோடு இனிமேல் பாவம் செய்யாதே என்றும் ஆலோசனை கொடுத்தார். வியாதிகளுக்கும் வறுமைகளுக்கும் மரணங்களுக்கும், சாபங்களுக்கும் பயத்துக்கும் திகிலுக்கும், பாவம் காரணமாக இருக்கிறது.

சங்கீதம் 103 : 5 இல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. பாவங்கள் மன்னிக்கப்படுவதாலும், அக்கிரமங்கள் வாழ்வில் விலக்கப்படுவதாலும், தேவன் வியாதிகளை விலக்கி, ஆரோக்கியப்படுத்தி, நீடித்த வாழ்வை கொடுக்கிறார். முடிவிலே உங்களை முடிசூட்டுகிறார். நீடித்த வாழ்வும், முடிசூட்டுவதும் தேவன் தரும் மேன்-

பூமிக்கு வந்தார். இரத்தம் சிந்தினார். பாவ மன்னிப்பை உண்டாக்கினார். கலா. 3 : 13 இல் "இயேசு கிறிஸ்து நமக்காக சாபமாகி, சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" என்றும், "கர்த்தரோ நம் எல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்." (ஏசா. 53: 6) என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தில் யாரெல்லாம் நம்பிக்கை வைக்கிறார்களோ! அவர்களுக்கு பாவ மன்னிப்பு உண்டாகிறது. பாவம் மன்னிக்கப்படும்போது, சுகவாழ்க்கைக்கான ஆசீர்வாதம் வந்து விடுகிறது. இப்படியாக வாழ்ந்து தன்னையும் தன் மக்களையும் பினேகாஸ் பரிசுத்தத்திற்குள் நடத்தினான். அந்த பரிசுத்தத்தில் வைராக்கியம் பாராட்டினான். இதை தேவன் பார்த்து அவனை மேன்மைப்படுத்தினார். பரிசுத்தம் இல்லாத பட்சத்தில் தேவனுடைய ஆசீர்வாதங்களை எமது வாழ்க்கையிலே அனுபவிக்க

ஆண்டவர் சொல்கின்றார் : கர்த்தர் நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறந்து பரிபூரண நன்மை உண்டாக கட்டளையிடுவார். (உபா. 28 : 11, 12) ஒன்றை மறந்து விடக்கூடாது. அவர் நமக்காக வானத்தை திறக்கிறேன் என்று வாக்கு கொடுத்திருக்கின்றார். அவர் நமக்கு வானத்தை திறக்கும்பொழுது அவர் தருகிற ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவரை குறித்து இப்படியாக சொல்கிறார் : பூமியானது மழையைப் பெறும்பொழுது அதிலுள்ள பூண்டுகளும், செடிகளும் கனிகொடுக்கின்றன. அதுபோல பரலோகத்திலிருந்து தேவன் தந்தருளுகிற பரிசுத்த ஆவியானவரை, நாம் பெறும்பொழுது எமது வாழ்வும் ஒரு செழிப்பாகி ஒரு கனி நிறைந்த, ஒரு மேன்மையான வாழ்க்கையாக மாற்றப்படுகின்றது.

> **"பார் எகிப்து தேசம் முழுவதற்கும் உன்னை அதிகாரியாக்கினேன், பார்வோன் தன் கையில் போட்டிருந்து முத்திரை மோதிரத்தை கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை உடுத்தி அவனுக்கு உடுத்தி, பொற்சரற்பணியை அவன் கழுத்திலே தரித்து, தனது இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, தெண்டனிட்டு பணியுங்கள்"**

மூன்றாவது காரியம்

தேவனுக்கு பரிசுத்தமாக இருக்க வேண்டும்.

எண்ணாகமம் 25 : 11-13

நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ், என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்திவைராக்கியம் காண்பித்ததினால், இஸ்ரவேல் புத்திரர்மேல் உண்டான என் உக்கிரத்தைத் திருப்பினான். ஆகையால், இதோ, அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிடுகிறேன். அவன் தன் தேவனுக்காக பக்திவைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்தபடியினால், அவனுக்கும் அவனுக்குப் பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார்.

பினேகாசுக்கு கர்த்தர் ஒரு மேன்மையைக் கொடுக்கிறார். ஏனெனில் கர்த்தருக்கு முன்பாக அவன் பரிசுத்தமாக இருந்தான், பரிசுத்தத்தில் வைராக்கியம் உள்ளவனாக காணப்பட்டான். மற்றவர்களுக்குள் தேவனுக்காக பரிசுத்தமாக வாழ்ந்தான்.

எமது பரிசுத்தம் எமக்கு அருகில் இருப்பவர்களையும் பரிசுத்தப்படுத்தவே செய்யும். நாம் பரிசுத்தமாயிருக்கும்பொழுது கர்த்தருடைய பரிசுத்தம் உங்கள் அருகில் இருக்கிறவர்களையும் பிடித்துக் கொள்ளும். நம்முடைய பரிசுத்தத்தில் நாம் கவனமாயிருக்காவிட்டால் என்னுடைய பரிசுத்த கவலையீனம் அருகிலிருக்கிறவர்களையும் பாதிக்கும். எனவே பரிசுத்தமாக இருக்க வேண்டும். அப்பொழுது கர்த்தர் சொல்கிறார். "உன்னை மேன்மையாக வைப்பேன்"

பரிசுத்தமாய் வாழ கற்றுக்கொள்ள வேண்டும். நாம் பூரண பரிசுத்தத்தை அடைந்து விட்டோமா? நிச்சயமாக இல்லை. வேதம் சொல்கிறது : பரிசுத்தமாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தம் ஆகட்டும். இன்னும் பரிசுத்தமாக முயற்சி செய்ய வேண்டும்.

மையை குறிப்பிடுகிறது. மட்டுமில்லாமல் இதுவே தேவன் விரும்புகிற மேன்மையாக இருக்கிறது. நீங்கள் நீடித்த வாழ்வை ஆரோக்கியத்தோடே வாழ்ந்து அனுபவிப்பதையே தேவன் விரும்புகிறார். பரிசுத்தமான வாழ்வு அக்கிரமங்களையும் பாவங்களையும் எமது ஆத்துமாவை விட்டு, விலக்கி விடுகிறது. அக்கிரமம், பாவமும் எங்கள் வாழ்விலே மன்னிக்கப்படும்போது, சுகவாழ்வு இலகுவாக வந்து விடுகிறது.

யாத்திராகமம் 20 : 5 இல் பிதாக்களுடைய அக்கிரமம் பிள்ளைகளிடத்தில் விசாரிக்கப்படுகிறது என்று வேதம் விளக்குகிறது.

பெற்றோர், குடும்பத்தலைவர்கள், பரிசுத்தத்தில் அசதியாக இருந்தால், அது பிள்ளைகளை பாதிக்கிறது. அவர்களுடைய சந்ததியும் இதனால் பாதிக்கப்படுகிறது. இதினிமித்தமே குடும்பங்கள் பயங்கரமான மரணங்களையும் சாபங்களையும் வியாதிகளையும் வறுமைகளையும் குடும்பங்களிலே வரவழைத்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் உள்ளவர்களை விடுவிக்கத்தான் ஆண்டவர் இயேசு,

முடியாது. அவரை தரிசிக்கவும் முடியாது. எபி. 12 : 14 "பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிப்பதில்லை" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே தான் நீங்களும்கூட பினெகாசைப்போல தேவனுடைய பரிசுத்தத்தில் வாழ்வீர்களானால், கர்த்தர் உங்கள் வாழ்வை மேன்மையடையச் செய்வார். ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய சகல பாவங்களையும் கழுவும்பொழுது, தேவனுடைய பரிசுத்தம் எங்களுடைய வாழ்வில் வந்து விடுகிறது. அந்த பரிசுத்த இரத்தமே சகல பாவ, சாப, வியாதி, மரண வல்லமைகளை எங்களுடைய வாழ்க்கையை விட்டு வெளியேற்றுகிறது. அந்த பரிசுத்தத்தின் நிமித்தமே தேவன் நம்முடைய வாழ்க்கையை மேன்மைப்படுத்துவார்.

நான்காவது காரியம்

பரிசுத்த ஆவியில் நிறைந்திருந்தல் வேண்டும்.

குறிப்பாக யோசேப்பு என்கிறதாகிய ஒரு வாலிபன், தன் சொந்த சகோதரர்களாலே உதாசீனப்படுத்தப்படுகிறான். அவன் வாழ்ந்த காலத்திலே அந்நியர்கள், அடிமைகளை பணத்துக்கு வாங்குவார்கள். இந்த யோசேப்பும் தனது சகோதரர்களால் அந்நியருக்கு பணத்துக்காக விற்கப்பட்டான். அந்நியர்கள் அவனை தங்கள் தேசத்துக்கு கொண்டு சென்றார்கள். அவன் அடிமையாக அவர்கள் மத்தியில் சேவை செய்து வந்தான்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் யோசேப்பு தேவன் கொடுத்தருளுகிறதான பரிசுத்த ஆவியிலே நிறைந்த மனிதனாக இருந்தான். பரிசுத்த ஆவியானவர் கொடுத்த சந்தோஷத்திலும், சமாதானத்திலும் நிறைந்தவனாக வாழ்ந்து வந்தான், எப்பொழுதுமே எச்சூழ்நிலைகளிலும் ஆவியிலே களிகூர்ந்தவனாக இருந்தான். தன் சகோதரர்களால் அந்நியர்களிடத்திலே அடிமையாக விற்கப்பட்டதைக்கூட எண்ணி, துக்கப்படவில்லை. தேவனுடைய ஆவியானவர் அவைகளை எண்ண முடியாதபடிக்கு அவனை மகிழ்ச்சியால் நிறைத்து வைத்திருந்தார். அந்நாட்களிலே மறுமுறையும் அவன் செய்யாத ஒரு குற்றத்திற்காக, அவனை சிறைச்சாலையிலே அடைத்தார்கள். அங்கும் அவன் அதே ஆவியானவருக்குள் சந்தோஷமாக இருந்தான். ஒரு நாள் வந்தது. எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோன் அவனை சிறைச்சாலையிலிருந்து வெளியே கொண்டுவருகிறான். வெளியே வரவழைக்கப்பட்டதாகிய யோசேப்பைப் பார்த்து அந்த எகிப்து தேசத்து ராஜாவாகி பார்வோன் சொல்கிறதைப் பாருங்கள் : "**தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவன் உண்டோ என்று சொல்லி,** யோசேப்பை நோக்கி சொல்கிறான் : "பார் எகிப்து தேசம் முழுவதற்கும் உன்னை அதிகாரியாக்கினேன், பார்வோன் தன் கையில் போட்டிருந்து முத்திரை மோதிரத்தை கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை உடுத்தி அவனுக்கு உடுத்தி, பொற்சரற்பணியை அவன் கழுத்திலே தரித்து, தனது இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, தெண்டனிட்டு பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாக அறிவித்து, எகிப்து தேசம் முழுவதற்கும் அவனை அதிகாரியாக்கினார். ஆதி. 41 : 38, 41-43) இது தேவனால் வந்த மேன்மை.

உங்களுடைய வாழ்விலும் சோதனைகள், கசப்புகள், தோல்விகள், வைராக்கியங்கள், மற்றவர்களால் கைவிடப்பட்டதாகிய அனுபவங்கள், ஏமாற்றப்பட்டதான அனுபவங்கள், நிராகரிக்கப்பட்டதான அனுபவங்கள் காணப்படலாம். இதிலிருந்து நீங்கள் விடுவிக்கப்படுவது ஒரு கஷ்டமான காரியம். இவைகள் உங்கள் சமாதானத்தைக் கெடுப்பதற்கான ஒரு காரணம். சந்தோஷத்தை உங்களைவிட்டு விலக்கி வைப்பதற்கும் இது ஒரு காரணமாக இருக்கின்றது. அதோடுகூட நீங்கள் தனிமையாக்கப்படுவீர்கள். நித்திரையில்லாமல் தவிப்பீர்கள். மட்டுமல்லாமல், இப்படிப்பட்ட சூழ்நிலைகள் மனோ நிலையை பாதித்து விடுகிறது. மன அழுத்த நிலைகளுக்குள் கொண்டு போய் விடுகிறது. சிலர் தற்கொலை கூட செய்து விடுகிறார்கள். சிலருடைய குடும்பங்கள் பிரிந்து போய் விடுகிறது. சிலர் அவசரப்பட்டு செய்யக்கூடாத காரியங்களைச் செய்து சிறைச்சாலை வரைக்கும் சென்றுவிடுகிறார்கள்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்

பயத்திற்கும் கவலைக்கும் எதிரான அறிக்கை

இன்று விஞ்ஞானம் நிறைந்த நவீன உலகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், அநேகருடைய வாய்களிலே "என்ன நடக்குமோ? என்ன செய்வதென்றே தெரியவில்லை." போன்ற அநேக வார்த்தைகளை அநேகரிடமிருந்து கேள்விப்படுகிறோம். அதற்குக் காரணம் அவர்களிடத்திலே காணப்படுகின்ற நம்பிக்கை இன்மையே!

வைத்தியர்கள் கைவிட்டு விட்டார்கள், பிள்ளைகளுடைய எதிர்காலம், முறிந்து போன திருமணம், பிரிந்திருக்கும் குடும்பம், பொருளாதார வீழ்ச்சி, தொழில் இழப்பு போன்ற காரியங்கள் மக்கள் மத்தியிலே நம்பிக்கையின்மையை ஏற்படுத்தி பயத்தை தோற்றுவிக்கிறது. இதன் விளைவாக அவர்கள் பயப்பட்ட காரியம் அவர்களுடைய வாழ்க்கையில் வருகிறது. பயம் தேவனிடத்தில் இருந்து வருவதல்ல. பயம் வேதனையுள்ளது. ஆகவேதான் ஆண்டவர் சொன்னார் : "பயப்படாதே நான் உனக்குத் துணை நிற்கிறேன்" இதை நாம் நம்புவோமானால், நாம் பயப்படும் காரியங்களிலிருந்து பூரணமான விடுதலையைப் பெற்றுக்கொள்ள முடியும். **பயம் - இருளின் அதிகாரங்கள் நமது வாழ்க்கையிலே கிரியை செய்வதற்கு ஒருவழியை ஏற்படுத்தும்.** அதே நேரம் **"விசுவாசம் - தேவன் எங்கள் சார்பில் செயற்பட வழியை ஏற்படுத்தும்".** யார் நமது சார்பில் செயல்பட வேண்டும் என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு நம்மிடத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. "விசுவாசித்தேன் ஆகையால் பேசினேன்" என்ற எழுதப்பட்டிருக்கிறபடி, விசுவாச வார்த்தைகள் தேவனை நம்முடைய சார்பில் செயல்பட வைக்கும்.

ஆகவே பயத்துக்கு எதிரான நம்பிக்கையான வார்த்தைகளை வாயினாலே அறிக்கையிட்டு, சந்திக்கின்ற சூழ்நிலைகளை (வியாதி அல்லது ஏதாவது காரியத்தைக் குறித்த பயம்) மேற்கொள்வோம். தேவனுடைய வார்த்தைகள் உருவாக்கும் வல்லமையுள்ளது. நீங்கள் வாயினால் அறிக்கையிடும்பொழுது, அந்த வார்த்தைகள் உங்களுக்குத் தேவையான நன்மைகளை உருவாக்கும்.

நான் தேவனுடைய ஆலயமாயிருக்கிறபடியால் சாத்தானுக்கு என் மேல் எவ்வித அதிகாரமும் இல்லை.

நான் தீமையை நன்மையால் வெல்லுவேன்.

உலகத்திலிருப்பவனைப் பார்க்கிலும் என்னில் இருப்பவர் பெரியவராயிருக்கிறபடியால், எந்த சாத்தானையும் மேற்கொள்வேன்.

தேவன் நீர் என்னுடன் இருப்பதினால் தீங்கைக் குறித்துப் பயப்பட மாட்டேன். உம்முடைய வார்த்தையும், ஆவியானவரும் என் துணையாயிருப்பதால், எந்த அடிமைத்தனத்திற்கும், எவ்விதமான மரண பயத்திற்கும் நான் பயப்படாதிருப்பேன். எச்சூழ்நிலையிலும் நான் சோர்ந்து போக மாட்டேன்.

நான் ஆசீர்வாதமாய் இருப்பதற்கும் உம்முடைய நீதியில் நடப்பதற்கும் எதிராய் எந்த ஆயுதமும் எழுவதில்லை.

நான் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரம், எனவே நான் செய்வதெல்லாம் வாய்க்கும். நீர் என்மேல் (என் குடும்பத்தின் மேல்) கிரிசனையுள்ள தேவனாய் இருப்பதால், உலகத்தின் எல்லா இருளின் கிரியைகளுக்கும் நான் விலக்கப்பட்டுள்ளேன்.

எனக்காக நீர் தேவ தூதர்களைக் கட்டளையிட்டு இருக்கிறபடியால், ஒரு தீங்கும், ஒரு வியாதியும் என்னை அணுகாது, தேவ தூதர்கள் என்னைச் சூழ்ந்து, இருக்கிறபடியால், என் வழிகளில் எல்லாம் ஜீவன் உண்டு. அங்கே மரணம் இல்லை. நான் நீடித்த நாட்களாய் இவ்வுலகத்தில் நிலைத்திருப்பேன்.

நான் தேவனுடைய வார்த்தையின்படி செய்வதினால்" என் வழிகளிலெல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன்.

பிசாசானவன் எய்யும் எந்த அக்கினி அஸ்திரங்களையும் எரித்துப் போடும்படியான தேவனுடைய வார்த்தை என்னும் விசுவாசக் கேடகத்தை எடுத்துக் கொள்கிறேன்.

அதனால் பொல்லாங்கன் கொண்டு வரும் சகல தந்திரங்களையும் மேற்கொள்கிறேன். இயேசுக் கிறிஸ்து எனக்காகச் சாபமானபடியால், என்னுடைய சரீரத்தில் எந்தப் பெலவீனமோ, தீய வியாதிகளோ வருவதில்லை.

என் சரீரத்தைத் தொடும் எந்த வியாதிக்கான பக்ரீரியாக்களோ, வைரஸ்களோ இயேசுவின் நாமத்தில உடனடியாக அழிகப்படுவதாக. என்று கட்டளை கொடுக்கிறேன்.

தேவரீர்! நான் ஆரோக்கியமாய் இருக்கும்படி நீர் என்னில் உருவாக்கிய சகல நரம்பு மண்டலங்களும், தசைகளும், தசைநார்களும் உள் உறுப்புகளும் நேர்த்தியாய் இயங்குவதாக!

தேவனுடைய நியமத்திற்கு மாறாய் செயற்படும் சகல சுரப்பிகளின் செயற்பாடுகளும் உடனடியாக நிறுத்தப்படக் கட்டளை கொடுக்கிறேன்.

ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும் சகல வியாதிகளையும் மேற்கொள்கிறேன்.

"நான் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பிசாசை எதிர்த்து நிற்கின்றபடியால்" அவன் என்னை விட்டு ஓடிப்போவான்" என்று இயேசுவின் நாமத்தில் அறிக்கையிடுகிறேன் பிதாவே!

மேன்மையின் ஆண்டு...

இப்படியான உங்கள் வாழ்க்கையில் தேவன் பரலோகத்தில் இருந்து தந்தருளுகிற பரிசுத்த ஆவியானவரை பெற்று அவரோடு உறவாடுகிற ஒரு வாழ்வை அனுபவிப்பீர்களானால், எச்சூழ்நிலைகளும் உங்களை சேதப்படுத்தவே முடியாது. ஆவியானவருடைய சமாதானமும் சந்தோஷமும் உங்களுடைய வாழ்க்கையை இனிமையாக நிறைத்து வைத்தருளும்.

யோசேப்பை இதே ஆவியானவர் நடத்தினபடியால், அவன் சிறையிலே இருந்தா[illegible] மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தான. அருகிலிருந்தவர்கள் அவனுடைய வாழ்வின் முன்மாதிரியை அவதானித்தார்கள். அதுவே அந்த தேசத்தின் ராஜாவால் யோசேப்பு மேன்மைப்படுத்தப்படுவதற்கு காரணமாக அமைந்தது.

இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்பாக 17 வயதுள்ள ஒரு வாலிபன், (டாக்டர் போல் யங்கிச்சோ என்று அழைக்கப்படும் கொரிய தேசத்தில் அபிஷேகிக்கப்பட்ட ஊழியன்) இவர் கசநோயினால் பாதிக்கப்பட்டு மரணத்தருவாய்க்கு போனார். மரணத்தோடே போராடினவர். சாபகரமான வாழ்வை சிறு வயதிலேயே அடைந்தவர். இவருடைய கையிலே பரிசுத்த வேதாகமம் முதன் முதலாக கொடுக்கப்பட்டது. அதை நன்றாய் படிக்கத் தொடங்கினார். கிறிஸ்துவின் இரட்சிப்பை பெற்றுக்கொண்டார். பரிசுத்த ஆவியானவரை பரலோகத்திலிருந்து நிறைவாய் பெற்றுக்கொண்டார். அந்நாட்களிலே பல தரப்பட்ட பிரச்சனைகளையெல்லாம் அவர் வாழ்விலே சந்தித்தார். அப்பிரச்சனைகள் அவரை ஒன்றும் சேதப்படுத்தவில்லை. அவர் பெற்றுக்-கொண்ட பரிசுத்த ஆவியானவர், அவரை சமாதானமாய், சந்தோஷமாய் நடத்தினார். அவர் பரிசுத்த ஆவியானவருடன் நல்ல ஐக்கியம் கொண்டார். காலையில் தன் படுக்கையை விட்டு எழுந்தவுடனே "இன்று நீர் தான் எனக்கு தலைவர், என்னை நடத்தும்" என்று சொல்லி விடுவார். அதனுடைய பிரதிபலன் என்ன? கொரியா தேசத்தை மட்டுமல்ல, இன்று அநேகர் அறியத்தக்கதாக உலகத்திலேயே ஒரு மேன்மைபடுத்தப்பட்ட தலைவராய் மாற்றப்பட்டார்.

பரிசுத்த ஆவியானவரை தங்கள் வாழ்விலே முத்த தலைவராக ஏற்றுக்கொண்டு வாழ்வோமாக இருந்தால், அவருடைய சொற்படியே செய்வோம். அவரையே பிரியப்படுத்துவோம். அதனுடைய பிரதிபலன், இந்த பூமியிலே பரிசுத்த ஆவியானவர் மேன்மைபடுத்தப்பட்டுள்ளதுபோல, அவருடன் இணைந்து கொண்ட எம்முடைய வாழ்க்கையையும் அவர் மேன்மைபடுத்துவார்.

நீங்களும் உங்கள் வாழ்க்கையிலே ஆவியானவரால் நிறைந்திருப்பீர்களானால் உங்களுக்கும் நிச்சயமாக மேன்மை உண்டாகும். ஆவியிலே நிறைந்த வாழ்க்கை அவரால் வழிநடத்தப்படுகின்ற வாழ்வாய் அமைந்து விடுகிறது. அதுதான் உங்கள் வாழ்க்கையில் மேன்மையை கொண்டுவரும். நிச்சயம் தேவன் உங்களை மேன்மைபடுத்துவார்.

5வது காரியம்

உங்களுடைய வாழ்விலே ஜெபம் இருக்க வேண்டும்.

கிபியோனிலே கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி, நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று தேவன் சொன்னார். 1 இரா. 3:5

சாலோமோன் ஜெபம் செய்யும் ஓர் மனிதன். ஜெபிக்கிறவனிடத்தில் கர்த்தர் வருவார். இயேசு சொன்னார். "நீ உன் அறைக்கதவை பூட்டி அந்தரங்கத்தில் இருக்கின்ற பிதாவை நோக்கி விண்ணப்பம் பண்ணு. அப்போது அவர் உனக்கு வெளியரங்கமாய் பதில் கொடுப்பார்.

1 இரா. 3:9 வசனத்தில் ஆகையால் உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும், ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்.

தேவன் சாலோமொனிடத்தில் "என்ன வேண்டும்" என்று கேட்டபோது, "ஆண்டவரே! இந்த ஜனங்களை எல்லாம் விசாரிப்பதற்கு யாரால ஆகும்? ஆகையால் எனக்கு நன்மை தீமை அறியத்தக்க ஞானத்தையும், இந்த ஜனங்களை விசாரிக்கும் ஞானத்தையும் எனக்குத் தாரும்" என்று தேவனிடத்தில் கேட்கிறான்.

1 இரா. 3 : 10 வது வசனத்தில் : சாலொமோன் இந்தக் காரியத்தைக் கேட்டது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது.

எனவே உங்களது வாழ்க்கையிலே உகந்த விண்ணப்பம் இருக்க வேண்டும். அதாவது நன்றாக ஜெபிக்க வேண்டும். ஜெபம் இல்லாவிட்டால் கர்த்தர் வந்து உங்களிடத்தில் கேட்க முடியாது. எவ்வளவு தான் நீங்கள் முயற்சித்தாலும், ஒரு தாமதம், ஒரு தடை காணப்பட்டுக்கொண்டுதான் இருக்கும். அப்பொழுது கர்த்தர் சொல்கிறார். 1 இரா. 3 : 11 இல் நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக்கொண்டபடியினால், உன் வார்த்தைகளின்படி செய்தேன், ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன், இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை. இதுவுமன்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன், உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை" என்று சொல்லி கர்த்தர் சாலொமோனை ஆசீர்வதித்தார். கர்த்தர் சாலோமோன் ராஜாவுக்கு ஞானம், கனம், வல்லமை, மேன்மை எல்லாவற்றையும் கொடுத்தார்.

உங்கள் வாழ்விலும் நீங்கள் எப்பொழுதும் தேவனையே நம்பி விண்ணப்பம் பண்ணுகிறவர்களாக உங்கள் வாழ்வு இருக்குமானால் சாலொமோனை சந்தித்த கர்த்தர் உங்களையும் சந்தித்து ஆசீர்வதிப்பார்.

அவருடைய ஆசீர்வாதம் ஐஸ்வரியத்தையும் கனத்தையும் மேன்மையையும் உங்களுக்குத் தரும். அதோடே வேதனை கூட்டப்பட்டிருக்காது. தேவன் தராத ஆசீர்வாதங்கள் இந்த உலகத்தில் அநேகம் உண்டு. அவைகளோடே வேதனைகளும் சேர்ந்து இருக்கும். சாலொமோன் பெற்ற ஆசீர்வாதம் வேதனையற்ற ஆசீர்வாதம். அதில்தான் கர்த்தருடைய மேன்மை உண்டு. நீங்கள் தேவனுடைய சமூகத்திலே காணப்பட்டு, விண்ணப்பம் பண்ணுகிறவர்களாக வாழ்வீர்களாக. அங்கே கர்த்தர் உங்களை சந்திப்பார். ஜெபங்களுக்கு பதில்கொடுப்பார். உங்களை கனப்படுத்தி, மேன்மைப்படுத்துவார். ஆமென்.

எனவே இந்த ஐந்து காரியங்கள் அதாவது **ஆபிரகாமைப்** போன்ற **விசுவாசம்** இருக்க வேண்டும். **தாவீதைப்** போல **வார்த்தையைக்** கைக்கொள்ள வேண்டும். **பரிசுத்தத்திலே - பினேகாசுக்கு** இருந்த வைராக்கியம் இருக்க வேண்டும். **யோசேப்பைப்** போல **ஆவியானவரால்** நடத்தப்பட வேண்டும். **சாலோமோனைப்** போல எப்பொழுதும் **ஜெபிக்க** வேண்டும். இந்த ஐந்து காரியங்களும், உங்கள் வாழ்க்கையிலே அனுதினமும் நிறைந்திருக்குமானால், இந்த வருடத்திலே எல்லா மனுஷர்களிலும் கர்த்தர் உங்களை மேன்மையாக வைப்பார்.
ஆமென்.

நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.

(நீதி. 3 : 27)

உன்னிடத்தில் பொருள் இருக்கையில் உன் அயலானை நோக்கி: நீ போய்த்திரும்பவா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே.

(நீதி. 3 : 28)

ஜீவிய சாட்சிகள்



வவுனியாவில் இருக்கும் எனது தம்பியின் 3 வயது மகள் மீது அலுமாரி விழுந்ததன் நிமித்தம் பிள்ளையின் மண்டையோடு உடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் வவுனியாவில் வைக்கப்பட்டிருந்தார். மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த குழந்தையும், நம்பிக்கை இழந்த நிலையில் பெற்றோரும் இருந்தார்கள். நாங்கள் சபையைத் தொடர்பு கொண்டு ஜெபித்ததன் பின்பு சமீபத்திற்கு மாத்திரமல்லாமல் தூரத்துக்கும் தேவனாகியிருக்கிற பரம வைத்தியர் இயேசு ஆச்சர்யமான சுகத்தைக் கொடுத்து, பிள்ளை வழமைபோல அனைத்தையும் செய்யக்கூடியதாக கர்த்தர் பூரண ஆரோக்கியத்தைக் கொடுத்தார். கர்த்தருக்கே மகிமை

- சிவானந்தன் சர்வானந்தன்



2012ம் ஆண்டு ஜனவரி மாதம், நான் முழு நேரமாக வேலை செய்து கொண்டு இருந்த இடத்தில் 3 நாட்களாக வேலை நேரத்தைக் குறைத்து, சம்பளமும் குறைவாகி விட்டது. அதனால் என்னுடைய அன்றாட செலவுகளை கவனிப்பதற்கு எனக்கு மிகவும் கஷ்டமாகி விட்டது. யாரிடமும் ஜனவரி மாதமே கடன் கேட்பதா என்று விட்டு ஒருவரிடமும் அது குறித்து கதைக்காமல் கர்த்தரே எனது தேவைகளை பார்த்துக் கொள்ளட்டும் என்று அவர் சமுகத்தின் என் தேவையை வைத்து விட்டேன். அந்த சமயத்தில் Tele Marketting தொலைபேசி அழைப்பினூடாக அழைப்பது போல் என்னை அழைத்து, நான் RBC bank வைத்த போட்டி ஒன்றில் ரொறன்ரோ பட்டியலில் என பெயர் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும், $1000.00 டொலர்களை வென்றுள்ளதாகவும் கூறினார்கள். அதன்பின்னர் அது குறித்து எனக்கு ஒரு கடிதமும் அனுப்பியிருந்தார்கள். நான் அதை பெரிதாக நம்பவில்லை. என்றாலும் அதனை கையொப்பமிட்டு அனுப்பி விட்டேன். ஆனால் ஆச்சரியப்படத்தக்கதாக மறுநாள் எனது வங்கிக் கணக்கில் 1000 டொலர்கள் போடப்பட்டிருந்தது. எனது தேவையை அறிந்து ஏற்ற நேரத்தில், ஏதோ ஒரு வகையில் ஒத்தாசை அனுப்பிய கர்த்தருக்கு எனது நன்றிப்பலி-களை ஏறெடுக்கின்றேன்.

- கீர்த்தனா அன்ரன் ரவீந்திரா



எனது கணவன் பாரிசவாதம் ஏற்பட்டு நடக்க முடியாமலும், பேச முடியாமலும் மிகவும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சபையார் அனுதினமும் எனது கணவனை ஜெபத்தில் தாங்கி வந்தார்கள். ஊழியர்கள் அன்றாடம் வைத்தியசாலையில் வந்து எனது கணவனுக்காக கர்த்தரிடம் பாரத்தோடு ஜெபித்து வந்தார்கள். ஜெபத்தைக் கேட்ட தேவன், அவருக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். 20 நாட்களாக ஒவ்வொரு நிமிடமும் என்ன நடக்குமோ என்ற பயத்தோடு இருந்து கொண்டிருந்த எனக்கு, நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று வாக்குக்கொடுத்த தேவன், எனக்கு எல்லாவற்றையும் தாங்கும் பெலத்தையும் சகாயத்தையும், கிருபையையும் கொடுத்தார். மட்டுமல்லாமல் கணவனுக்கு Stroke ஏற்பட்டபோது திடீரென விழுந்தபோதும், எந்த ஒரு இடமும் அடிபடாதபடி அற்புதமாகக் காத்துக் கொண்டார். சாதாரணமாக 6 மாதம் ஒரு வருடம் என்று வேதனையடையாதபடிக்கு மிகவும் விரைவிலே அவர் பேசத்தக்கதாகவும், நடக்கத்தக்கதாகவும் சுகத்தைக் கொடுத்த கர்த்தருக்கு கோடான கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றேன்.

- ராஜேஸ்வரி சண்முகதாசன்



கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம். கடந்த மாதத்திலே இருமல் சலி வருத்தத்தங்களால் மிகவும் வருத்தத்திற்கு உட்பட்டிருந்தேன். கர்த்தர்தாமே என்னை குணமாக்கினார். அது மாத்திரமல்லாமல் இரண்டு தடவைகள் வாகன விபத்துக்களை சந்திக்க வேண்டி வந்தது. இருந்தபோதும் எனக்கு எந்த சேதமோ, வேதனையோ இல்லாமல் கர்த்தர் அற்புதமாக என்னைக் காத்துக் கொண்டார். கர்த்தர் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் கர்த்தரை நன்றியுள்ளத்தோடு துதித்து அவர் நாமத்தை மகிமைப்படுத்துகிறேன்.

பத்மசிறி மைக்கல்



இரண்டு வாரங்களுக்கு முன்பாக எனக்கு ஒரு பரீட்சை எழுத வேண்டியிருந்தது. ஆனால் எனக்கு அப்பரீட்சையைக் குறித்து என்னால் செய்யமுடியுமோ என்ற சந்தேகம் காணப்பட்டது. நான் இதைக் குறித்து கூறியபோது சபையில் பாஸ்டரும், எனது வீட்டாரும் எனக்காக ஜெபித்தார்கள். நான் பரீட்சை எழுதப்போன நேரம், நான் அதை சரியாக செய்து முடிப்பேன் என்ற நிச்சயமின்றி பதட்டத்துடன் காணப்பட்டேன். ஆனால் எனது உள்மனதில் கர்த்தர் எனக்காக எதையோ ஒரு பெரிய காரியத்தை செய்யப்போகிறார் என்பதை உணர்ந்தேன். அப்போது எனக்கு வேதத்தில் நீதி. 15 : 33 இல் சொல்லப்பட்டிருக்கின்ற "கர்த்தருக்கு பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும். மேன்மைக்கு முன்னானது தாழ்மை" என்ற வார்த்தை ஞாபகத்தில் வர கர்த்தரிடம் என்நிலை குறித்து அந்த வாக்குத்தத்தை சொல்லி ஜெபித்தேன். ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் ஆச்சரியமாக என்னை Pharmacist Technician இற்கான ஒரு மேற்படிப்பை தொடர்வதற்காக நடந்த அந்தப் பரீட்சையிலே சித்தியடையச் செய்தார்.

- ஜெகு உமேஷ்



கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நான் கடந்த வருடம் ஒரு நிறுவனத்தில் வேலை செய்ய ஆரம்பித்திருந்தேன். ஆனால் அந்த இடத்தில் நான் மிகவும் குறைந்த ஸ்தானத்திலிருந்த ஒரு வேலையையே செய்ய நியமிக்கப்பட்டிருந்தேன். அந்த நிறுவனத்திலே நான் வயதிலே குறைந்தவனாக இருந்தபடியால், என்னிடம் வயதில் கூடிய அனைவரும் ஒவ்வொரு வேலைகளை கட்டளையிட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால் தேவனுடைய கிருபையால், இந்த வருடம் அங்கிருக்கும் உபதலைவருக்கு கீழே ஓர் உயர்ந்த பதவியைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

அதுமட்டுமல்லாமல் அந்த நிறுவனத்தின் ஊடாக நான் மேற்படிப்பை தொடர்வதற்கும், அதற்கான ஒரு விசேட ஊதியத்தையும் தந்து உற்சாகப்படுத்தி வருகிறார்கள். இதைவிட எனக்கு ஒரு விமானியாக வரவேண்டும் என்ற ஆர்வம் காணப்பட்டதினால் அது சம்பந்தமான கல்வியைத் தொடர்ந்து வந்தேன். இந்த வருடத்தில் நான் விமானம் ஓட்டும் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளவும், விமானத்தை ஓட்டவும் கூட கர்த்தர் கிருபை செய்தார்.

- ஜொய்சன் புவனசிங்கம்



கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். இந்த 2011ம் ஆண்டு எனக்கு ஒரு மிகவும் ஆசீர்வாதமான வருடம். எனது மகன் ஆஷாப் இந்த வருடம் கர்த்தரை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றார். அத்துடன் நானும் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து, இன்னும் கர்த்தரை நெருங்கிச் சேர கிருபை செய்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல் இந்த வருடத்தில் எனக்கு இருந்த பொருளாதார கஷ்டத்தினால் Bankruptcy க்கு செல்ல தீர்மானித்திருந்தேன். ஆனால் இது குறித்து எமது சபையின் உதவிப்போதகர் ராஜு'விடம் கதைத்த போது, அவர் அப்படிச் செய்யாது பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படக்கூடிய விதத்தில் வேதத்தின்படி அறிவுரைகளைக் கூறி வழிகளைக் காண்பித்தார். அதன்படியே கீழ்ப்படிந்து செய்தபோது, 2011ம் ஆண்டிலேயே மிகவும் கூடிய கடனைக் கொடுத்துத் தீர்த்த வருடமாக இந்த வருடத்தை கர்த்தர் மாற்றி ஆசீர்வதித்தார். அதனூடாக Remortgage க்கு 10 வீதம் கொடுத்து தீர்க்கவும், எனது Mortgage க்கு 10 வீதம் செலுத்தவும் கர்த்தர் எனது வருமானத்தை ஆசீர்வதித்தார். என் தேவைகளைச் சந்தித்து பொருளாதாரத்தில் ஆசீர்வாதத்தை தந்த தேவனுக்கு பல கோடி நன்றிகளை செலுத்துகின்றேன்.

- சகோ. ஜோசியா மயூரன்



கர்த்தருக்கு ஸ்தோத்திரம். சபையினால் நடத்தப்பட்ட விடுதலைப் பெருவிழாவின்போது பொருளாதார ஆசீர்வாதத்திற்காக கொடுக்கப்பட்ட தேவ செய்திக்கு கீழ்ப்படிந்து, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின்படி, $ 300.00 டொலர்களை கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வந்து செலுத்தினேன். அதன்பின்னர் கர்த்தர் எனக்கு ஒரு காரை வாங்க கிருபை செய்தார். மட்டுமல்லாமல் வேலைத்தளத்தில் எனது ஞானத்தினாலோ, பலத்தினாலோ நான் பெற்றுக்கொள்ள முடியாத மனித தயவுகளை ஏற்படுத்தித் தந்தார். இப்படி என்வாழ்வில் தேவன் செய்து வரும் ஒவ்வொரு நன்மைகளுக்காகவும் என்னைத் தாழ்த்தி கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றேன்.

- மிறானி நிரஞ்சன்



2011ம் ஆண்டு ஜுலை மாதம் 29ம் திகதி 3 முறை கடுமையான காய்ச்சல் எனது கணவரை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு கொண்டு சென்றார். ஏற்கனவே சுகவீனம் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருந்துவந்த எனது கணவர் மீண்டும் உயிருடன் திரும்புவார் என்ற நம்பிக்கையற்ற நிலையே காணப்பட்டது. இருந்தாலும் அந்த நாட்களிலே சபையில் நடைபெற்ற உபவாசக்கூட்டத்திலும் ஞாயிறு ஆராதனையிலும் போதகர்களிடம் சொல்லியும், ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. ஜெபத்தைக் கேட்ட தேவன், எசேக்கியல் ராஜாவுக்கு ஆயுசுநாட்களை கூட்டிக்கொடுத்தது போல பரிபூரண ஆரோக்கியத்தைக் கட்டளையிட்டார். அதற்காக என் தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கின்றேன். அதுமட்டுமல்லாமல் 10 வயது நிரம்பிய எனது மகள் ஆண்டவருக்காக தன்னை முழுமையாக அர்ப்பணிக்கத்தக்க இருதயத்தைக் கொடுத்திருக்கின்றார். அதற்காகவும் கர்த்தரை நான் முழு இருதயத்தோடு துதிக்கின்றேன்.

- எல்சி செல்வச்சந்திரன்



ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். கடந்த வருடம் நான் பாரிஸ் தேசத்திற்கு விடுமுறைக்காக சென்றிருந்தபோது, ஓர் விபத்துக்குள்ளாகி எனது காலில் முறிவு ஏற்பட்டிருந்தது. அந்த தேசத்தில் நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபடியால் 20,000 டொலர்களை நான் அதற்காக செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் தினமும் விசுவாசித்து நம்பியிருக்கும் என் தேவன், அந்தப் பணத்தை ஒரு பகுதி அரசாங்கம் செலுத்தத்தக்கதாகவும், மிகுதித் தொகையை நான் கட்டாமலே எனது வைத்தியத்தை செய்து கொள்ளத்தக்கதாகவும், தயவுகளை ஏற்படுத்திக் கொடுத்தார். மட்டுமில்லாமல் மீண்டுமாக நான் நடக்கத்தக்கதாக எனக்கு பூரண ஆரோக்கியத்தையும் கட்டளையிட்டார். இப்படி இக்கட்டான ஒரு கால கட்டத்தில் போதகர்கள், ஊழியர்கள், சபையார் அனைவரும் எங்களை ஜெபத்தில் தாங்கியது மட்டுமல்லாமல், ஓர் குடும்பமாக பல உதவிகளைச் செய்து ஒத்துழைத்தார்கள். எல்லாவற்றுக்கும் தயைகூர்ந்த கர்த்தருக்கும் சபையாருக்கும் எனது நன்றிகளைத் தெரி-விக்கின்றேன்.

- சகோ. மேரி ஜேம்ஸ்



கர்த்தர் நல்லவர். பிரியமானவர்களே! கடந்த ஆண்டிலே தேவன் எனது வாழ்விலே மிகவும் பெரிதான ஓர் அதிசயமான காரியத்தை தேவன் செய்தார். நான் நீண்டகாலமாக எதிர்பார்த்து வந்த விருப்பத்தை தேவன் நான் விரும்பியதற்கும் மேலாக என்னை ஆசீர்வதித்தார். கடந்த 17 வருடங்களாக நான் ஒரு Car Dealership நிறுவனத்தில் Salesman ஆக பணியாற்றி வந்தேன். 1997ம் ஆண்டு சபையின் பாஸ்டர் எனது அலுவலகத்திற்கு வந்து ஆதி. 12 : 2 வது வசனத்தை எனக்கு வாக்குத்தத்தமாக தந்து ஆசீர்வதித்து, "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" என்று ஆசீர்வதித்துவிட்டுச் சென்றார். அதன்பின்னர் நான் புத்தகசாலையிலே அந்த வாக்குத்தத்தத்தை Sticker ஆக வாங்கி, எனது அலுவலகத்தில் ஒட்டி வைத்து, அனுதினமும் நான் அதைப் பார்த்து, அந்த ஆசீர்வாதத்தை விரும்பி அதற்காக ஜெபித்து வந்தேன். ஆனால் எனக்கு அந்த நாட்களில் வியாபாரம் தொடங்குவதற்கு எந்த எண்ணமும் இருக்கவில்லை. நாட்கள் கடந்தன. 15, 16 வருடங்களாக அந்த இடத்திலே ஆசீர்வாதத்துடன் பணியாற்றி வந்தேன். அந்த அதிகாரிகள் என்னை நன்றாக கவனித்து வந்தார்கள். 3 மாதத்திற்கு ஒரு புதிய வாகனம் தருவார்கள். வருடத்துக்கு $100,000 க்கு மேலாக ஊதியத்தை பெற்று வந்தேன். ஆனாலும்கூட தேவனுடைய சித்தம், அவர் என்னை தனியாக கொண்டு சென்று ஆசீர்வதிக்க வேண்டும் என்பதே. எங்கள் சபைப் போதகர்களுக்கூடாக அதை கர்த்தர் ஞாபகப்படுத்தினார். 2008ம் ஆண்டு வாகன விற்பனை மிகவும் பாதகமான சூழ்நிலையில் காணப்பட்டது. நான் பயந்துபோய் இருந்தேன். ஆனாலும் அந்த நேரத்திலும்கூட கர்த்தர் என் பொருளாதாரங்களிலே எந்தக் குறைவும் வராது காத்து ஆசீர்வதித்தார். அதன்பின்னர் தனியாக வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காக 3 வருடங்களாக முயற்சி செய்து பல இடங்களைப் பார்த்து வந்தேன். என்றாலும் கர்த்தர் "இது நான் தந்த இடமில்லை" என்று ஒவ்வொன்றாக தவிர்க்கப்பண்ணினார். இறுதியில் Kennedy வீதியிலே, அநேகர் காணக்கூடிய ஒரு நல்ல இடத்தில் எனக்கு ஒரு இடத்தைக் காண்பித்தார். உடனே நான் சபையின் போதகர்களை, ஊழியர்களைக் கூட்டிச் சென்று காண்பித்து, ஜெபித்து இதுவே ஏற்ற இடம் என்பதை

உறுதியாகக் கண்டு அந்த இடத்தை வாங்கினேன். என்றாலும் அதற்கு அதிகமான பணம் தேவைப்பட்டதினால் இன்னொருவரை பங்காகச் சேர்ந்து அந்த வியாபாரத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டேன். ஆனால் கர்த்தர் என்னைத் தனியாக ஆரம்பிப்பதற்காகவே சித்தம் கொண்டிருக்கின்றார் என்பதை அறிந்து, வாங்குவதற்கு ஒப்பந்தம் பண்ணியிருந்த வேளையிலே அதை நிறுத்தி, அந்நிறுவனத்தை வாங்காமல் இருந்து விட்டேன். மீண்டும் அதுவே கர்த்தர் என்னை ஆசீர்வதிக்க வேண்டிய இடம் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு வருடத்தின் பின் அதே உரிமையாளர்கள் என்னை தொலைபேசியில் அழைத்து அந்த இடம் இன்னும் வாங்குவதற்காக காத்திருக்கின்றது என்பதை அறிவித்தார்கள். அதன்பின்னர் அதுதேவ சித்தம் என்பதை அறிந்து, சபையின் தேவ ஊழியர்களை அழைத்து ஜெபித்து அந்த இடத்தை வாங்கி விட்டேன். ஆனால் இம்முறை எந்த ஒரு பங்காளரும் இல்லாமல் தனியாகவே நான் அதை வாங்கக்கூடியதாகவும், நான் ஒரு 10 அல்லது 15 வாகனங்கள் நிறுத்தக்கூடிய ஒரு இடத்தை தான் எனது வியாபாரத்துக்கு தேடிக் கொண்டிருந்தேன். ஆனால் கர்த்தர் 200 இற்கும் மேற்பட்ட வாகனங்களை நிறுத்தக்கூடியதான ஓர் நல்ல இடத்தைத் தந்து, வாகன விற்பனை மாத்திரமன்றி, வாகனத்தை திறுத்திக் கொடுக்க, Service செய்து தரக்கூடிய Garage, Service Station எல்லாவற்றோடும் கூடிய ஒரு இடத்தைத் தந்து பரிபூரணமாக ஆசீர்வதித்தார். அதுமாத்திரமல்ல "என் பெயரை பெருமைப்படுத்துவேன்" என்று வாக்குக் கொடுத்த தேவன், 10, 15 வருடங்களுக்கு முன்னர் என்னிடம் வாகனங்களை வாங்கிய தமிழ் மக்கள், என்னை வாழ்த்தி, திரும்பவும் எனது நிலையத்துக்கு வந்து வாகனங்களை வாங்கக்கூடியதாக கிருபை செய்திருக்கிறார். தமிழ் மக்கள் மாத்திரமல்லாது, பல்லின மக்களும் வந்து அந்த இடத்தில் வாகனங்களை வாங்கக்கூடியதாக கர்த்தர் என்னை ஆசீர்வதித்ததற்காய் என் ஆண்டவர் இயேசுவை உயர்த்தி என்னைத் தாழ்த்தி கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துகிறேன். கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது : நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் ஜோதிகளுடைய பிதாவினிடத்தில் இருந்த கடந்த வருகிறது என்ற வார்த்தையின்படியே பொறுமையோடு காத்திருந்த என்னை கர்த்தர் ஆசீர்வதித்தார்.

- சகோ. Andy திருச்செல்வம்



கர்த்தருடைய நாமத்துக்கு மகிமையுண்டாவதாக. 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் திகதி, நானும் லதாவும் திருமணம் செய்து 25 வருடங்களை நிறைவு செய்திருக்கிறோம். உறவினர், நண்பர்களாக கனடாவில் வந்து அந்த மகிழ்ச்சியை விமரிசையாகக் கொண்டாட கர்த்தர் செய்த தயவுக்காகவும், இந்நாள் வரைக்கும் அவருடைய கரம் எம்மை வழிநடத்தி வருவதற்காகவும் நன்றியோடு கர்த்தரை துதிக்கிறோம். எங்களுக்கு கர்த்தருக்கு கீழ்ப்படிந்து பயபக்தியுடன் வாழும் இரண்டு பிள்ளைச் செல்வங்களை கர்த்தர் தந்திருக்கிறார். அவர்களில் மூத்த மகன் UKயில் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கிறார். அவர் 3 வருட படிப்பை முடித்து அதில் சித்தியடைய செய்ததுடன், அந்த தேசத்தில் இருப்பதற்கு விசா நீடிப்பையும் அனுமதித்து, நல்ல ஒரு தொழிலையும் கொடுத்ததற்காய் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். கர்த்தர் எப்பொழுதும் நல்லவராகவே இருக்கிறார். அவருக்கே எமது துதி, கன, மகிமை அனைத்தையும் செலுத்துகிறோம்.

- யோசேப் அன்ரனிப்பிள்ளை ரவீந்திரகுமார்



கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம். இந்த ஆண்டிலே கர்த்தர் எனக்கு ஒரு துணையையும் தந்து, என்னுடைய திருமணத்தையும் ஆசீர்வதித்தார். கிட்டத்தட்ட 600 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ளும் வகையில் மிகவும் சிறப்பாக இலங்கையிலே என்னுடைய திருமணத்தைச் செய்ய கர்த்தர் தயை கூர்ந்தார். ஆசீர்வாதத்துடன் என்னுடைய திருமணம் நடந்து முடிந்ததற்காய் என் கர்த்தருக்கு நான் நன்றிகளைச் செலுத்துகிறேன்.

- திருவேரகன் ஞானசேகரன்



கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம். கடந்த வருடம் இலங்கை தேசத்திலிருந்து இந்த தேசத்துக்குள் வந்து சேர கர்த்தர் கிருபை செய்தார். விமானத்தில் ஏறினவுடனே கனடா வந்த விடலாம் என்று நினைத்தேன். ஆனால் அப்படியில்லாமல் பல நாடுகளையும், காடுகளையும் கடந்து வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மரணப்பள்ளத்தாக்குகளில் இருந்து அடியேனை கர்த்தர் மீட்டு, எனது சிறையிருப்பை மாற்றி, இந்த திருச்சபையில் கொண்டு வந்து கர்த்தர் சேர்த்த கிருபைக்காக கர்த்தருக்கு எனது நன்றிப்பலிகளை ஏறெடுக்கின்றேன்.

- சாம் சண்முகநாதன்



கர்த்தருடைய நாமத்துக்கு மகிமையுண்டாவதாக. நான் நிற்பதும் நிர்மூலமாகாது இருப்பதும் தேவனின் சுத்த கிருபை. என்னையும் என்குடும்பத்தையும் இந்த வருடம் முழுவதும் கண்மணிபோல பாதுகாத்து வந்ததற்காய் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். எனது இந்த வயது சென்ற நேரத்தில் படியில் இருந்து வழுக்கி விழுந்துவிட்டேன். ஆனாலும் என் தேவன் எனக்கு எந்த ஒரு சேதமும் ஏற்படாதபடி என்னுடைய கால்களுக்கு எந்த ஒரு கேடும் வந்து விடாதபடி, காத்துக் கொண்டார். அது மட்டுமல்லாமல் ஹொலண்ட் தேசத்துக்கு சென்று வரவும் கிருபை செய்தார். என்னை தாங்கி, தப்புவித்து பெலன் கொடுத்த அந்த கர்த்தருக்கு கோடான கோடி ஸ்தோத்திரங்கள்.

- பவளம் அம்மா



2011ம் ஆண்டின் கடைசி ஒரு மாத காலத்தில் பிராங்பேர்ட், மலேஷியா, இலங்கை தேசங்களுக்கு கடந்து சென்று கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றி வர கர்த்தர் கிருபை செய்தார். விசேடமாக இந்த ஊழியப் பிரயாணத்தின்போது கர்த்தருடைய கரம் கூட இருந்து பெரிய காரியங்களைச் செய்ததை என்னால் உணரக்கூடியதாக இருந்தது. சென்ற இடங்களிலெல்லாம் ஆவியானவர் வல்லமையாக கிரியை செய்ததை, அங்கு கேட்ட சாட்சிகளுக்கூடாகவும், அற்புத அடையாளங்களுக்கூடாகவும் அறிந்து கொள்ள முடிந்தது.

ஜேர்மன் தேசத்திலே நின்ற 5 நாட்களிலும், என்னை மிகவும் நன்றாக பராமரித்தார்கள். ப்ராங்பேர்ட் அறுவடை சபையினரோடு சேர்ந்து மகிழ்ச்சியோடு நின்று துதித்துப் பாடவும், அங்கிருக்கின்ற தாகமுள்ள, அந்த சிறுகூட்ட வாலிபர்களை உற்சாசப்படுத்தவும், ஐக்கியம் கொள்ளவும் நான் அங்கு நின்ற காலத்திலே ஒருவர் ஞானஸ்நானத்துக்கு ஒப்புக்கொடுக்கத்தக்கதாகவும் கர்த்தர் சிலாக்கியத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்.

மலேஷியா தேசத்திலே எனது சகோதரனின் திருமணத்தை ஒரு குறைவும் இல்லாமல் சிறப்பான முறையிலே நடத்தி வைக்க கர்த்தர் கிருபை செய்தார். தேவன் என்னுடைய வாழ்க்கையிலே செய்த நன்மைகளை சாட்சியாக நான் உறவினர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், எனது அன்பைப் பகிர்ந்து கொள்ளவும், குடும்பக்காரியங்கள் எல்லாவற்றையும் நன்றாக கவனித்து விட்டு வரவும் கர்த்தர் கிருபை செய்தார். அதுமாத்திரமல்லாமல் சில இடங்களிலே இயேசுவின் அன்பைப் பகிர்ந்து கொள்வதற்கு ஏற்றவகையில் நற்செய்திக்கூட்டங்கள் நடத்துவதற்கு ஒழுங்குபடுத்தியிருந்தார்கள். நான் மெதடிஸ் குடும்பத்திலிருந்து சென்றபடியால் மெதடிஸ்த சபைகளுக்கும் சென்று இயேசுவின் அன்பைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது. நாங்கள் ரொறன்ரோவிலிருந்து இலங்கையில் செய்யும் ஊழியங்களை DVDயில் பார்த்த மெதடிஸ்ட் திருச்சபையார் இலங்கை தேசத்தில் செய்யப்படும் ஊழியங்கள் எவ்வாறு செய்யப்படுகின்றது என்பதை ஆர்வத்துடன் கேட்டு அவர்களும் மலேஷியா தேசத்தில் அதுபோன்ற ஒரு ஊழியப்பணியைச் செய்ய ஆர்வப்பட்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் சென்ற சபைகளிலெல்லாம் சுவிசேஷத்தைக் குறித்து பேசின போது அநேக வாலிபர்கள் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். அநேக சபையார் உயிர்மீட்சி அடைந்திருக்கிறார்கள்.

இன்னும் மலேஷியா தேசத்திலே இயேசுவின் அன்பை பகிர்ந்து கொள்ள கர்த்தர் ஒரு பெரிய வாசலை திறந்திருக்கிறார். அங்கு நின்ற காலத்திலே ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தினாலே காரியங்களைச் செய்யும் ஒரு சீன இன சகோதரனை சந்திக்க கர்த்தர் கிருபை கொடுத்தார். அவர் தேவ அன்பினாலே ஏவப்பட்டு, அங்கு குடியுரிமை அற்று இருக்கும் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியிலே ஊழியம் செய்து வருகிறார். அவர்மூலமாக கிடைத்த தகவலின்படி, அங்கு விசா இல்லாமல் அகதிகளாக இருக்கும் மக்களுக்கு, UN நிறுவனத்தினால் ஒரு அட்டை வழங்கப்படும். அதைத்தவிர அவர்கள் அந்த தேசத்தில் படிக்கவோ, தொழில்செய்யவோ முடியாது. உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவோ ஏன் உணவு வேண்டுவதற்கே அவர்களுக்கு மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்குள்ளே 3,000 இலங்கைத் தமிழ் அகதிகளும் வாழ்ந்து வருகிறார்கள். அந்த சீன சகோதரன் இந்த இலங்கைத் தமிழ் அகதிகளை சந்தித்து இயேசுவின் அன்பைக் குறித்ததான சத்தியத்தை சொல்ல விரும்பியும், அவருக்கு மொழி தெரியாததன் காரணமாக அதற்கென்று ஒருவரை எதிர்ப்பார்த்து காத்திருந்தார். எங்கள் சபையைக் குறித்து அறிந்ததினால் அவர் எங்கள் சபையினூடாக அவர்களுக்கு இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிக்க எங்களை மகிழ்ச்சியோடு தெரிந்து கொண்டிருக்கிறார். பதியப்பட்ட மக்கள் 3000 பேராக இருந்தாலும், UN நிறுவனத்தினால் பதிவு செய்யப்படாத அநேக இலங்கை மக்கள் (சுமார் 16,000) மிகவும் நெருக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அன்பின் இயேசுவால் சந்திக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட வேண்டும். இப்படியாக மலேஷியாவிலே தேவன் கொடுத்த தரிசனங்களை திட்டங்களை வாசல்கள் திறக்கப்பட்டிருக்கின்றது. அதை நிறைவேற்றி வர கர்த்தர் கிருபை கொடுத்தார்.

அதன்பின்னர் இலங்கை தேசத்துச் சென்றேன். அங்கு போதகர்களைச் சந்திக்கவும், 600 இற்கும் மேற்பட்ட அம்பாறை, அக்கறைப்பற்று வாலிபர்களைச் சந்திக்கவும், அவர்களோடு வேத வார்த்தைகளை பகிர்ந்து கொடுக்கவும், ஆதரவற்று, சோர்ந்து போயிருக்கும் அந்த வாலிபர்களை, அந்த தேசத்தை கட்டியெழுப்பும் வாலிபர்களாக, எதிர்கால தலைவர்களாக மாற்ற அவர்களை உற்சாகப்படுத்தவும், அவர்களோடு இணைந்து ஜெபிக்கவும் கர்த்தர் தயை கூர்ந்தார். தேசத்திலே ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபையால் செய்யப்படுகின்ற ஊழியங்களுக்காக ஆர்வப்பட்டு தரிசனத்தை நிறைவேற்ற காத்திருக்கும் ஊழியர்களை சந்திக்கவும், கர்த்தர் கிருபை செய்தார்.

கர்த்தர் பாஸ்டர் வின்சன்ட் அவர்களுக்கூடாக கொடுத்த தேசங்களைக் குறித்ததான தரிசனம், கர்த்தர் இந்த கடைசிக் காலத்திலே சுவிசேஷம் உலகமெங்கும் கடந்து செல்ல வேண்டும் என்ற உலகத்தைக் குறித்ததான தரிசனத்தை நிறைவேற்றி, ஆத்துமாக்களை தேற்றி, பலப்படுத்தி, இரட்சித்து, தேவனுடைய இராஜ்யத்துக்குள் கொண்டு வருவதற்காய், அன்பினாலும், ஜெபத்தினாலும், காணிக்கைகளினாலும் உற்சாகப்படுத்திய ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபையாருக்காக, ஊழியர்களுக்காக, எல்லாவற்றையும் நிறைவேற்றி முடித்து, ஆசீர்வாதத்துடன் கடந்து வர உதவி செய்த கர்த்தருக்காகவும் எனது நன்றிப்பலிகளை செலுத்துகிறேன்.

- டேவிட் விக்ரர் அருமைநாயகம்

புகழ்ச்சி

ராஜாவின் சமுகத்தில் மேன்மை பாராட்டாதே, பெரியோர்களுடைய ஸ்தானத்தில் நில்லாதே. உன் கண்கள் கண்ட பிரபுவின் சமுகத்தில் நீ தாழ்த்தப்படுவது நல்லதல்ல, அவன் உன்னைப் பார்த்து: மேலே வா என்று சொல்வதே உனக்கு மேன்மை.

ரொறன்ரோ ஊழியங்கள்

முதியோர்களுக்கான ஊழியம்

2011ம் இல் ஆரம்பிக்கப்பட்ட ஊழியங்களில் முதியோர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட Anna-Simon முதியோர் ஐக்கியம் டிசம்பர் 21ம் திகதி புதன்கிழமை கிறிஸ்மஸ் ஒன்று-கூடலாக நடைபெற்றது. சபையில் இருக்-கும் முதியவர்கள், தங்களுக்கு தெரிந்த முதியவர்களையும் அழைத்து வந்து, அன்பைப் பகிர்ந்து கொள்ளவும், கர்த்தரு-டைய வேத வார்த்தைகளை பகிர்ந்து கொள்ளவும், இறைமகன் இயேசுவை புகழ்ந்து பாடவும், தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தவும், இந்த ஊழியம் உதவி-யாயிருந்தது. வயதான நாட்களில், தங்கள் ஆதங்கங்களை

தொடர்ச்சி 14ம் பக்கம்











துதி ஆராதனை

"நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன்" என்று 2011 ஆண்டில் வாக்குக் கொடுத்த தேவன், தேவனுக்காக உலகெங்கிலும் பாடல்களைப் பாடி, அவர் நாமத்தை உயர்த்தி வரும் வல்லமையான தேவ ஊழியர்களை ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபைக்கும் அழைத்து வந்து தேவனை துதித்து ஆராதித்து அவர் நாமத்தை மகிமைப்படுத்த கிருபை செய்தார்.

2011 செப்ரெம்பர் 25ம் திகதி தேவனுடைய நாமத்தை "என் மீட்பர்" ஒலியிழையினூடாக அகிலமெங்கும் பாடி உயர்த்தி வரும் இந்தியாவைக் சேர்ந்த சுவிசேஷகரும், பாடகருமாகிய Bro. Freddy Joseph அவர்கள் கலந்து கொண்டார். ஆங்கில ஆராதனை, தமிழ் ஆராதனை இரண்டிலும் அருமையான தேவ செய்திகளை பகிர்ந்து கொண்டதுடன், சபையை துதி ஆராதனைக்குள் நடத்தி தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்.

2011, ஒக்ரோபர் 09ம் திகதி யூதாவின் செங்கோல் ஒலியிழை ஊடாக அநேக பாடல்களை பாடி தேவனுடைய நாமத்தை உயர்த்தி வரும் இலங்கையைச் சேர்ந்த திருகோணமலை, தீர்க்கதரிசன தேவ சபையின் போதகர் Pastor Chandrseharan அவர்கள் ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபையின் ஆசீர்வாத ஆராதனையில் கலந்து கொண்டு தேவனுடைய நாமத்தை உயர்த்த, கர்த்தர் வாசல்களைத் திறந்தார்.

2011ம் ஆண்டு ஒக்ரோபர் 30ம் திகதியன்று ஞாயிறு ஆராதனையில் India, Ruah Revival Church ஸ்தாபகரும், "நன்றி" ஒலியிழையினூடாக அநேக துதிப்பாடல்களை பாடி தேவனுடைய நாமத்தை உயர்த்தி வரும் Pastor. Alwin Thomas அவர்கள் கலந்து கொண்டு தேவ பிரசன்னத்துக்குள் சபையாரை மகிழ்ச்சியுடன் வழிநடத்திச் சென்றார். கர்த்தருக்கே துதி கன மகிமையுண்டாவதாக.













Youth Ministry

“வாலிபனே உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னை பூரிப்பாக்கட்டும். உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட... ஆனாலும் இவை எல்லாவற்றின் நிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி.”
பிரசங்கி 11 : 9

இந்நாட்களிலே அநேக பெற்றோருடைய ஆதங்கம், தங்களுடைய வாலிபப்பிள்ளைகளை எப்படி, இந்த பாவம் நிறைந்த உலகத்திலிருந்து பாதுகாப்பது என்பதே. காரணம் வாழ்கின்ற இந்த தேசங்களும், வாலிபர்களுடைய சுதந்திரம் என்ற பெயரில் பெற்றோருடைய கட்டுப்பாட்டை இழக்கச் செய்கிறது. நம்முடைய தேசங்களிலே குடும்ப கௌரவத்தை பேணிக் காத்து வாழ்ந்த அநேக குடும்பங்கள், இன்று பொலிஸ் நிலையங்களிலும், வாலிப சீர்திருத்த நிலையங்களிலும், நீதிமன்றங்களிலும் இருந்து வேதனைப்படுவதை எங்கள் கண்களுக்கூடாக கண்டு கொண்டிருக்கிறோம். பாதுகாப்பாக பாவம் செய்வதற்கு இந்தச் தேசம் கரம் கொடுக்கின்றது என்றால் மிகையாகாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வேறு வழியின்றி வாழ்ந்து கொண்டிருக்கும் அநேக குடும்பங்களை நாம் தினசரி காண்கின்றோம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தாலும், அவர்கள் நடுவிலே கடவுளுக்காக உண்மையாக பரிசுத்தமாக வாழ முடியும் என்பதை நிரூபித்துக் கொண்டிருப்பதே ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபையின் வாலிபர் ஊழியம்.

யார் இந்த வாலிபர்கள்? மேலே குறிப்பிட்ட பிரகாரம், பாவப்பழக்க வழக்கங்களுக்குள்ளே அடிமைப்பட்டிருந்தவர்கள், தங்களுடைய வாழ்க்கையை சீர்திருத்த முடியாமல் நண்பர்களுடன் காலங்களை செலவழித்துக் கொண்டிருந்தவர்கள், எதிர்காலத்தைக் குறித்த தரிசனமின்றி வாழ்ந்து கொண்டிருந்தவர்கள்.

இவர்கள் சபையின் வாலிப ஊழியங்களுக்கூடாக சந்திக்கப்பட்டார்கள். தேவ அன்பு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. எதிர்காலத்தை குறித்த நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டது. மனந்திரும்பி, தேவனை ஏற்றுக்கொண்டு தங்கள் வாழ்க்கையின் நோக்கத்தை அறிந்து கொண்டார்கள். அவர்களே இன்று வாலிப ஊழியங்களில் பங்கெடுத்து மற்றவர்களுக்கு சாட்சியாகவும், தேவ அன்பை எடுத்துச் செல்கிறவர்களாகவும், ஜெப வீரர்களாகவும், நற்பணி செய்கிறவர்களாகவும் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபையின் வாலிபர்கள், அநேக ஊழியங்களுக்கு தங்களுக்கு கிடைக்கும் நேரங்களை அர்ப்பணித்து, சபைக்கு ஒத்தாசையாக இருந்து உதவி புரிந்து வருகின்றார்கள். 2011 ஆண்டின் கோடை காலம் முழுவதிலும் ஊழியப்பணிக்குத் தேவையான நிதியுதவிகளை சேகரிப்பதற்காக பல நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தியிருந்தார்கள்.

ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனையின் முடிவில் சிற்றுண்டிகளை செய்து வந்து அவற்றை விற்பதனூடாக வரும் நிதி, மற்றும் வீட்டிற்கு அவசியமான பொருட்கள், பாவனையில்லாமல் சேகரித்து வைக்கப்படும் பொருட்களை மலிவு விற்பனை செய்து அதனால் வரும் நிதி போன்றவற்றை சேகரித்து நிதியுதவிகளை வழங்கி வருகிறார்கள்.

உங்கள் குடும்பங்களிலும் இருக்கும் வாலிபப் பிள்ளைகளை குடும்பத்துக்கும் தேசத்துக்கும் ஆசீர்வாதமானவர்களாக உருவாக்க சபைக்கு அழைத்து வாருங்கள். எங்கள் உதவி தேவையாயிருந்தால் தொடர்பு கொள்ளுங்கள். பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இரவு 7.30 மணிக்கு வாலிபர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் (பாடசாலை, பல்கலைக்கழகம்) பிரச்சனைகளைக் குறித்து கலந்தாலோசித்து, அவற்றை எப்படி மேற்கொள்வது போன்ற ஆலோசனைகளை பெற்றுக் கொள்கிறார்கள். எனவே நீங்களும் கலந்து கொண்டு நடைமுறையில் சந்திக்கும் பிரச்சனைகளை சுலபமாக மேற்கொள்ளுங்கள்.

■ ■ ■

























சிறுவர்களுக்கான ஊழியம்

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்





"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்."
நீதி. 22 : 6

இதனை கருத்திற்கொண்டே ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபையின் இன்னுமொரு ஊழியமாக சிறுவர் ஊழியமாக வளர்ந்து வருகிறது. சபையின் ஆரம்ப நாட்களிலே சிறுவர்களாக இருந்தவர்கள் இன்று சபையின் ஊழியங்களில் பங்கெடுக்கும் வாலிபர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். மட்டுமல்லாமல் அவர்கள் பெற்றோருக்கும், சபைக்கும், தேசங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்கிறார்கள். காரணம் சிறுவயதிலேயே கடவுளுக்கு பயப்படும் பயத்தில் போதிக்கப்பட்டபடியினால் இப்பொழுது ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாக இருக்கிறார்கள்.

இப்பொழுது இருக்கும் சிறுவர்களும் அவ்வாறு சிறந்த தலைவர்களாக மாற்றப்படுவதற்கு, இந்த சிறுவர் ஊழியம் செயற்பட்டு வருகிறது.

கடந்த வருடங்களில் சிறுவர்கள் தேவனுக்காக அநேக பாடல்களை, பாடி, சிறுவயதிலேயே தேவனை ஆராதிக்கிறவர்களாக துதியின் ஆண்டிலே தேவனை மகிழ்வித்தார்கள். இவர்களைப் பயிற்றுவித்து தேசத்தின் எதிர்கால தலைவர்களாக உருவாக்கி வரும் ஆசிரியர்களுக்காக நிச்சயமாக நாங்கள் கர்த்தருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

சிறுவயதிலேயே வேதத்தை கற்கிறார்கள். கர்த்தருக்காய் எப்படி வாழ வேண்டும் என்று பயிற்றுவிக்கப்படுகிறார்கள். அன்பைப் பகிர்ந்து மனமகிழ்ச்சியோடு வாழ பழகிக்கொள்கிறார்கள். சிறுபிள்ளைகளுக்கான ஓய்வுநாள் பாடசாலையானது பிரதி ஞாயிறுதோறும் காலை 9.30 மணிக்கும்,



10.30 மணிக்கும் நடைபெற்று வருகிறது. உங்கள் பிள்ளைகளும் தேவ சமூகத்தில் வளர்க்கப்பட அழைத்து வாருங்கள். ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

Hallelujah Day!

ஒக்ரோபர் 31ம் திகதி என்றவுடனே, இருளிலே பயங்கரமான உருவங்களை முக மூடிகளாக போட்டுக் கொண்டு, வித்தியாசமான உடைகளை உடுத்திக் கொண்டு இரவு வேளையாகிற போது இனிப்புகளை சேகரிப்பதற்காக செல்லும் சிறுபிள்ளைகள் உங்கள் ஞாபகத்துக்கு வரும்.

ஆனால் எங்கள் பிள்ளைகள் அந்த நாளிலே குளிரிலே வெளியே செல்லாமல், பயங்கரமான உருவங்களை உடுத்தி மனதிற்குள்ளே பயத்தை உண்டு பண்ணும் காரியங்களை தவிர்த்து, தேவ சமூகத்தில் மனமகிழ்ச்சியோடு விளையாடி, திண்பண்டங்களை உண்டு, அந்த நாளை களிக்கத்தக்கதாக நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன.









Esther Ministry

"உன் வேண்டுதல் என்ன? அது உனக்கு கொடுக்கப்படும்."

- எஸ்தர் 5 : 6

கர்த்தருடைய கிருபையினாலே 2011, ஓகஸ்ட் மாதம் 20ம் திகதி சனிக்கிழமை "எஸ்தர் ஊழியம்" (Esther Ministry) என்ற பெயரில் பெண்களுக்கான ஊழியத்தை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை செய்தார். மாதத்தின் 3வது சனிக்கிழமைகளிலே காலை 8.00 மணிக்கு சகோதரிகளாக, வாலிபப் பெண் பிள்ளைகளாக கடந்து வந்து காலை உணவு ஐக்கியத்துடன் பெண்களுக்கான ஒன்றுகூடலை நடத்தி வருகின்றோம்.

இந்த ஊழியத்துக்கூடாக வேதத்தின் அடிப்படையில் பெண்கள், அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் முன்னேற்றம் காணவும், குடும்பத்தைக் கட்டுவதிலும், சபையிலே ஊழியங்களைச் செய்யவும், மற்றவர்களை உற்சாகப்படுத்தவும், தேசத்திற்கு ஆசீர்வாதமாக இருக்கவும் உதவும் வகையில் தேவ செய்திகளுக்கூடாக பலப்படுத்தப்படுகின்றார்கள். மொத்தத்தில் பெண்கள் தங்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்படுவதற்கும் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பதற்கும் ஏற்றவகையில் கர்த்தர் கொடுத்த இந்த ஊழியப்பணிக்காக நன்றி செலுத்துகிறோம்.

பெண்களாக இணைந்து தேவனை துதித்து ஆராதிக்கவும், மற்றவர்களுடன் தங்கள் அன்பைப் பகிர்ந்து கொள்ளவும், ஒருவருடைய தேவைகளை ஒருவர் சொல்லி தேவைகளுக்காக தேவனிடம் மன்றாடவும், ஐக்கியம் கொள்ளவும் இந்த ஊழியம் மிகவும் ஆசீர்வாதமாக இருக்கின்றது. நீங்களும் இவ்வூழியத்தில் இணைந்து கொண்டு ஆசீர்வாதமாக இருக்க முடியும். விபரங்களுக்கு எம் முடன் தொடர்புகொள்ளுங்கள்.

சகோதரிகள், வாலிப சகோதரிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். குடும்பத்திற்கு, சபைக்கு, தேசத்திற்கு ஆசீர்வாதமாக மாறுவோம்!

ஆயத்தமாகுங்கள்! அயலில் இருக்கும் சகோதரிகளையும் அழைத்து வாருங்கள்! அழைத்து உங்கள் வரவை உறுதிப்படுத்துங்கள்.








கோடை கால ஒன்று கூடல்









ஒவ்வொரு வருடமும் ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபையின் தேவ பிள்ளைகள் குடும்பங்களாக கூடி வந்து இந்த ஒன்றுகூடலை நடத்தி வருகிறார்கள். இந்நாளில் முதியோர் முதல் சிறியோர் வரை களிகூரும் படியான விளையாட்டுக்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். அதிலே கலந்து கொண்டு தங்கள் திறமைகளை காண்பித்து களிகூருவதற்கும், ஒருவரோடு ஒருவர் ஐக்கியப்படுவதற்கும் ஏதுவான ஒரு நிகழ்வாக இந்த நாள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது. அனுதின வாழ்வில் அயராது உழைத்து களைத்துப் போயிருக்கும் ஒவ்வொருவருக்கும் இந்த நாள் ஒரு மனமகிழ்ச்சியின் நாளாகவே அமைந்தது.

சங்கீதக் கதிரை, கிளித்தட்டு, கயிறு இழுத்தல், கிரிக்கெட், உதைப்பந்தாட்டம், கைப்பந்தாட்டம் என்று பெரியவர்களும், சாக்கு ஓட்டம், பனிஸ் உண்ணுதல், பலூன் உடைத்தல் போன்ற சிறுவர்களுக்கான விளையாட்டுக்களும் அனைத்து வயதினரையும் மகிழ்ச்சிப்படுத்தியது. மாத்திரமல்லாமல் தாயக நினைவுகளையும் சுமந்து வந்தது. தாயகத்திலே நாம் வாழ்ந்த மகிழ்ச்சியான வாழ்க்கையை இங்குள்ள நம் பிள்ளைகளும் அனுபவிக்கத்தக்கதாக இந்த நாள் அமைந்தது என்றால் மிகையாகாது.

ஒவ்வொரு குடும்பங்களும் மனமகிழ்ச்சியோடு தாங்கள் தயாரித்து வந்த உணவுகளை பரிமாறி ஒரே குடும்பமாக உண்டு மகிழ்ந்து, கோடைகாலத்தின் மகிழ்ச்சியான குடும்ப ஒன்றுகூடலாக மாற்றினார்கள்.


■ ■ ■

2011 இன் கிறிஸ்மஸ் விழா

கிறிஸ்மஸ் என்றவுடனே எல்லோருடைய மனதிலும் எண்ணத் தோன்றுவது விடுமுறையும் விருந்துபசாரமும் வீடுகளையும் தெருக்களையும் சுற்றி விதவிதமாய் அலங்கரித்து நிற்கும் மின்மினி பூச்சிகளைப் போன்ற மின்விளக்குகளும் தான். ஆனால் இன்று முழு உலகமும் எதிர்பார்க்கிறதும் விரும்புகின்றதுமான ஒரு விடயம் என்னவென்றால், சந்தோஷம் அல்லது சமாதானம். அரண்மனையில் இருப்பவர்கள் முதல் குடிசையில் இருப்பவர்கள் வரை இதனை எதிர்ப்பார்க்கிறார்கள். இந்த சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக பலவிதமான போதைவஸ்துக்களையும், மதுபானங்களையும் நாடி ஓடுகிறார்கள். ஆனால் மிஞ்சுவது எல்லாம் வேதனையும் சஞ்சலமுமே. அப்படியானால் இந்த மெய்யான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் உலகத்திலிருக்கிறவர்கள் பெற்றுக்கொள்ள முடியாதா??? **நிச்சயமாக முடியும்.**

உலகத்தின் இந்த எதிர்ப்பார்ப்பை நிறைவு செய்யும்படியாகவே, இறைமகன் இயேசு இந்த பூமியில் பிறந்தார். வேதாகமம் சொல்கிறது, அவர் சமாதான கர்த்தர். அவர் இந்தப் பூமியில் வெளிப்பட்டதன் ஒரே நோக்கம், சமாதானத்தை கொடுப்பதற்காகவே! எந்த வீடுகளிலே இந்த சமாதானத்தின் தேவன் இருக்கிறாரோ, அந்த வீடுகளிலே தேவனால் உண்டாகின்ற சமாதானம் காணப்படும். அந்த சமாதானத்தை, சந்தோஷத்தை உங்களிடத்திலிருந்து ஒருவராலும் எடுக்க முடியாது. இதை நினைவுகூரும்படியாகவே கிறிஸ்மஸ் நாட்கள் கொண்டாடப்படுகிறது. அந்த இயேசு உங்கள் வீட்டில் தங்குவாராக இருந்தால் நீங்கள் தேடி அலையும் அந்த மெய்யான சமாதானம் சந்தோஷம், உங்கள் வாழ்க்கையிலும் வந்துவிடும்.

இற்றைக்கு 2011 ஆண்டுகளுக்கு முன்னர்,



























தனது சாயலாய் படைக்கப்பட்டு, சத்துருவின் தந்திரத்தால் பிரிக்கப்பட்டு, வேதனையோடும் கண்ணீரோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் மனுக்குலத்துக்கு மீண்டும் மகிழ்ச்சியை தருவதற்கும், தனது அன்பை வெளிப்படுத்துவதற்கும் சித்தம் கொண்ட தேவன், தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, இயேசு கிறிஸ்துவைத் தந்த நன்நாள் இந்நாள் என்றால் மிகையாகாது.

இந்த மகிழ்ச்சியான நாளைக் கொண்டாடுவதற்காக ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபையினரும் அநேக நிகழ்ச்சிகளை ஆயத்தப்படுத்தியிருந்தார்கள். சிறுவர், வாலிபர், குடும்பத்தினர் அனைவருமே மிகவும் பிரயாசப்பட்டு, ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் கொடுத்த திறமைகளையும், தாலந்துகளையும் கொண்டு மிகவும் தரமானதும், தேவ அன்பை சிந்திக்க வைக்கும் நிகழ்வுகளைத் தந்தார்கள். தொடக்கம் முதல் முடிவுவரை, ஒரு நிகழ்ச்சி இன்னொரு நிகழ்ச்சியை மெருகூட்டும் வகையில் தொடர்ச்சியாக நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. பாடல்கள், இசை, நடனங்கள், நாடகங்கள் என கிறிஸ்மஸ் விழாவுக்கு கடந்து வந்த அனைவரையும் மகிழ்வடையச் செய்யும் வகையில் நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொருவரும் இயேசுவின் அன்பையும், வல்லமையையும் வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகளை சிறப்பித்திருந்தார்கள். கர்த்தர் தாமே பிரயாசப்பட்ட ஒவ்வொரு பிள்ளைகளையும் ஆசீர்வதித்து, இனியும் இவ்வாறான கலை நிகழ்ச்சிகளை நடத்த ஞானத்தையும், கிருபைகளையும் கொடுத்து நடத்துவாராக.

■ ■ ■

முழு உலகத்திற்கும் ஆசீர்வாதமான இலங்கை தேசம்!

கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங் கொண்டு, தமது ஜனத்தைக் கடாட்சிப்பார். (யோவேல் 2 : 18)



கடந்த 2011ம் ஆண்டில் ஹற்றன் மாநகரில் போதகர் கருத்தரங்கை நடத்தும்படியாகத் தேவன் கட்டளையிட்டார். அதற்கிணங்க இலங்கை தேசத்தின் 25 மாவட்டங்களில் இருந்தும், தமிழ் சிங்களப் போதகர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டு ஆசீர்வாத மாகாநாடு நடத்தப்பட்டது.

அப்போதகர் மகாநாடு நடத்தப்பட்டிருக்கும் பொழுது, அது நடத்தப்பட்ட அந்த மலையின் உச்சியிலிருந்து இலங்கை தேசத்தினுடைய ஆசீர்வாதத்திற்காகவும், மக்களுடைய இரட்சிப்பிற்காகவும் எல்லாப்போதகரும் ஒன்றுகூடி ஜெபித்த வேளையில், தேவன் தேசத்தைக் குறித்த தரிசனத்தைக் கொடுத்தார். அது என்னவெனில் வரப்போகும் 25 வருடங்களில் இலங்கை தேசமானது பாவம் நிறைந்ததான ஒரு தேசமாக மாற்றப்படப் போகிறது. அதற்காகப் பிசாசானவன் தீவிரமாக செயற்பட்டு தேசத்திலே அசுத்தமான காரியங்களையும், போதை வஸ்துக்கள், மதுபானங்கள் போன்ற செயற்பாடுகளினால் வாலிபர்களை அழிக்கத் தீவிரிப்பான். அத்திட்டத்திற்கு தேசத்திலுள்ள வாலிபர்களும், மக்களும் அறியாமல் தங்களை ஒப்புக் கொடுக்கும் போது, வேதத்திலே பாவம் நிறைந்த பட்டணங்களாய் தேவனுடைய கோபத்தினால் அழிக்கப்பட்ட சோதோம், கொமோராவைப் போன்ற பட்டணங்களைப்போன்று இலங்கை தேசமும், அழிக்கப்படுவதற்கு ஏதுவான பாவம் நிறைந்த தேசமாய் காணப்படும். மட்டுமல்லாமல் விசுவாசிகளுடைய பின்மார்க்கங்கள், ஊழியர்களுடைய பின்மார்க்கங்கள், திருச்சபையினுடைய பாழ்கடிப்புகளும் உண்டாகும்.

எனவே அப்படியான அழிவுகள் வருவதற்கு முன்னதாகவே தேசத்தின் 25 மாவட்டங்களுக்கும் கடந்து சென்று வாலிபர்களை கர்த்தருக்காக எழுப்பி விடவும், சபை விசுவாசிகளை திறப்பின் வாசலிலே நிற்கிறவர்களாக உருவாக்கவும், சுவிசேஷத்தினால் மக்கள் விடுதலையடையும்படிக்காக நற்செய்திக் கூட்டங்களை நடத்தவும் தேவன் கட்டளையிட்டுள்ளார். அதற்கமைய வருகின்ற இரண்டு வருடங்களில் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் நற்செய்திக் கூட்டங்கள், வாலிபர் கூட்டங்கள், விசுவாசிகள் மாநாடுகள், ஜெபயாத்திரைகள் என நடத்தி இலங்கை தேசத்தில் தேவ திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அதிக பிரயாசத்துடனும், ஜெபத்துடனும் செயற்படுத்தப்பட்டு வருகிறோம்.

நடத்தப்பட்ட கூட்டங்கள்

தேவ கிருபையினால் அவருடைய அநாதி தீர்மானத்தின்படி 2 வருடங்களுங்குள் 25 மாவட்டங்களையும் சந்திக்கும் திட்டத்தின் முதற் கட்டமாக ஆகஸ்ட் 26 - செப் 04 2011 காலப் பகுதியில் 4 மாவட்டங்கள் சந்திக்கப்பட்டன. திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில், நற்செய்திக் கூட்டங்களும், கருத்தரங்குகளும், வாலிபர் கூட்டங்களும், பொலநறுவை கண்டி மாவட்டங்களில் ஜெபயாத்திரையும் மிகவும் ஆசீர்வாதமாக நடாத்தப்பட்டன.

இரண்டாம் கட்டமாக, மன்னார், நுவரெலியா மாவட்டங்களில் நற்செய்திக் கூட்டங்களும், விசுவாசிகளுக்கான கருத்தரங்குகளும், வாலிபர் கூட்டங்களும், நற்செய்தி அனுராதபுரம், இரத்தினபுரி மாவட்டங்களில் ஜெபயாத்திரையும் மிகவும் ஆசீர்வாதமாக நடாத்தப்பட்டன.

இலங்கை தேசத்தைக் குறித்துத் தேவன் வெளிப்படுத்திய காரியத்தை இலங்கையில் உள்ள ஊழியர்கள் மத்தியிலும் ஏற்கனவே தெரியப்படுத்தியிருந்ததால், அவர்களும் இத்தரிசனத்தை முழு இருதயத்தோடு ஏற்றுக் கொண்டு தங்களுடைய பரிபூரண ஆதரவையும், ஒத்துழைப்புகளையும் கொடுத்து வருகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்தின் போதகர் ஐக்கியங்களையும் சந்தித்து சபையின் தலைமைப் பாஸ்டருக்குத் தேவன் கொடுத்த இந்தத் தரிசனத்தைக் குறித்துப் பகிர்ந்து கொண்டவுடன் அவர்கள் "இது தேவனிடத்தில் இருந்து வந்த காரியம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை." என்று முழு இருதயத்துடன் ஏற்றுக் கொண்டார்கள். அது மாத்திரமல்லாமல் இக்கூட்டங்கள் நடத்துவதற்குத் தேவையான சகல ஒத்துழைப்புகளையும் செய்வதற்குத் தங்கள் சபைகளோடு சேர்ந்து ஒப்புக் கொடுத்திருந்தார்கள். இவ்விதமாக தேசத்தில் இருக்கும் ஊழியர்களின் இருதயங்களும் எம்மோடு இணைந்து கொண்ட விதத்தைப் பார்க்கும்போது, தேவன் இந்தத் தரிசனத்தைக் கொடுத்தார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

நடந்த கூட்டங்களுடைய விபரங்கள்

முதலாவது கட்டம்

விசுவாசிகள் கூட்டம்

கர்த்தர் பாஸ்டர் வின்சன்ட் அவர்களோடு பேசி, வரப்போகிற வருடங்களிலே இலங்கை தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக திறப்பின் வாசலில் நின்று, விசுவாசிகளாகிய வாலிபப்பிள்ளைகளும் அவர்களின் பெற்றோரும் ஜெபிக்க வேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்தும்படி கட்டளையிட்டார்.

வேதத்தில் மத்தேயு 24 : 21ம் வசனத்தில் இவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது. "ஏனெனில் உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும் அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை. தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும். கர்த்தர் யோபுவிடம் தன் சிநேகிதர்களுக்காக வேண்டுதல் செய்யுமாறு கூறிய போது, யோபுவின் முகத்தைப் பார்த்து, யோபுவின் சிநேகிதர்களை ஆசீர்வதித்தார். அதேபோல இலங்கை தேசத்திலிருக்கிற வாலிபப் பிள்ளைகளும் பெற்றோரும் தேசத்திற்காக திறப்பின் வாசலில் நின்று ஜெபிக்கும்போது கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணினபடி தேசத்தில் வர இருக்கின்ற சாபங்களையும் அசுத்தங்களையும் தேசத்தை விட்டு அகற்றி தேசத்தை ஆசீர்வதிப்பார். இதை அங்கு இருக்கின்ற விசுவாசிகள் அறிந்தபோது, தங்கள் வாழ்க்கையில் கர்த்தர் வைத்திருக்கின்ற மேன்மையான அழைப்பை உணர்ந்து தேசத்திற்காக ஜெபிக்கத் தொடங்கினார்கள். திறப்பின்





தொடர்ச்சி அடுத்த பக்கம்

வாசலில் நின்று ஜெபிப்பதற்கு வேண்டிய அபிஷேகத்தையும் பரிசுத்த ஆவியானவரிடத்தில் இருந்து பெற்றுக்கொண்டார்கள்.

வாலிபர் கூட்டம்

இனிவரப்போகின்ற இரண்டு வருடத்திற்குள் இலங்கையில் இருக்கின்ற 25 மாவட்டங்களுக்கும் கடந்து சென்று, அங்குள்ள வாலிபப் பிள்ளைகளை கூட்டிச் சேர்க்கும்படி கர்த்தர் பாஸ்டர் வின்சன்ட் அவர்களுக்குக் கட்டளையிட்டார். இதற்குக் காரணம் வரப்போகின்ற 28 ஆண்டுகளில் தம்முடைய தேசத்திலே இதுவரை கண்டிராத பாவங்கள் பெருகும். உதாரணமாக போதை வஸ்து, மதுபானம், விபச்சாரம், காமவிகாரம் இன்னும் பல அசுத்தமான கிரியைகளைச் சொல்லலாம். இப்படியான காரியங்கள் தேசத்தில் வரும்பொழுது, இன்றைக்கு கிறிஸ்துவை விசுவாசிக்கின்ற வாலிபப் பிள்ளைகளும், தங்கள் விசுவாசத்தை விட்டு பின்வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். இதைத் தவிர்க்கும் பொருட்டாகவே, 25 மாவட்டங்களுக்கும் கடந்து சென்று, அங்கே வாலிபப்பிள்ளைகளை கர்த்தருக்காக எழுப்பும்படி, பாஸ்டர் வின்சன்ட் அவர்களுக்கு கர்த்தர் கட்டளையிட்டார். இதன்படி 4 மாவட்டங்களில் கடந்த நாட்களில் வாலிபர்களுக்கான கூட்டங்களை நடத்தி, முதலாவது கட்டத்தில் 1750 வாலிபப்பிள்ளைகள் இயேசுகிறிஸ்துவுக்காக சந்திக்கப்பட்டு, அவருடைய சித்தத்திற்காக தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள். நாங்கள் தொடர்ச்சியாக இந்த வாலிபப்பிள்ளைகளை சந்தித்து உற்சாகப்படுத்த வேண்டிய அதே நேரத்தில், மிகுதியாக இருக்கின்ற 17 மாவட்டங்களிலுள்ள வாலிபப்பிள்ளைகளும் சந்திக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

முதியோர்க...

வெளிப்படுத்தி, கர்த்தருக்-குள் தங்களுக்கு இருக்கும் விருப்பங்களை நிறைவேற்ற கர்த்தருக்காக தாங்கள் விரும்பும் ஊழியங்களை செய்ய இந்த ஐக்கியம் உதவியாக இருந்தது.

இந்த ஒன்றுகூடலிற்காக வந்திருந்தவர்கள், மனமகிழ்ச்சிடன் உணவு ஐக்கியத்தில் பங்கு கொள்ளவும் களிகூற கர்த்தர் இந்த நாளை ஆசீர்வதித்தார். வயதான நாட்களில் தனிமைப்பட்டிருக்கும் அவர்களையும் கர்த்தர் நேசிக்கிறார் என்பதை அவர்கள் அறிந்து மனமகிழ்ச்சியுடன் கடந்து சென்றார்கள். தொடர்ந்தும் இந்த ஊழியம் வளர்ந்து பெருக, சர்வ வல்ல கர்த்தரிடம் மன்றாடுவோம்.

திருகோணமலையில் (2011, ஒகஸ்ட் 26-28) சுவிசேஷ கூட்டங்கள், விசுவாசிகளுக்கான கருத்தரங்குகள், வாலிபர்களுக்கான கூட்டங்கள்

குறிப்பிட்ட 3 நாட்களும் திருமலைப் பிரதேசம் தேவ பிரன்னத்தினால் நிறைந்திருந்தது. பட்டணத்தின் சகல திருச்சபைப் போதகர்களும் இணைந்து தங்களது ஒத்தாசைகளை கொடுத்திருந்தபடியால், இக் கூட்டங்கள் சிறப்பாக மிகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சகல திருச்சபை விசுவாசிகளும் ஊழியர்களும் தங்கள் பூரணமான ஒத்துழைப்பைக் கொடுத்து இக்கூட்டங்களை சிறப்பிக்க, தங்கள் ஜெபத்தினாலும், பிரயாசத்தினாலும் உதவினார்கள். கனடாவில் இருந்து ரொரன்றோ அறுவடை மிஷனறி சபையின் தலைமைப் பாஸ்டர் வின்சன்ட் சகாயநாதன் அவர்களும், பாஸ்டர் ராஜு ஜேசுதாசன் அவர்களும் இங்கூட்டங்களை நடத்துவதற்காக, அங்கு சென்றிருந்தார்கள். இதற்காகத் தேவன் அவர்களை அபிஷேகத்தின் வல்லமையாலும், தேவவார்த்தையினாலும் அதிகமாக இடைகட்டி இருந்தார். ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபையின் தலைமைப் போதகர் பாஸ்டர் வின்சன்ட் சகாயநாதன் அவர்கள் விசுவாசிகள் கருத்தரங்கையும், சுவிஷேசக் கூட்டங்களையும் உதவிப் போதகர் பாஸ்டர் ராஜ ஜேசுதாசன் அவர்கள் வாலிபர் கூட்டங்களையும், நடத்தினார்கள். தேவன், ஊழியர்களை வல்லமையாய்ப் பயன்படுத்தி தம்முடைய கிருபையை தேசத்தில் வெளிப்படுத்தினார். கூட்டத்தில் கலந்து கொண்ட சபையார், வாலிபர்கள், ஊழியர்கள், இரட்சகரை அறியாத புதிய மக்கள் யாவரையும் தேவன் பட்சபாதமின்றி ஆசீர்வதித்தார். தேவ அன்பு வல்லமையாய் வெளிப்பட்டது. வாலிபர்கள் மத்தியில் தேவனுக்காய் வைராக்கியம் ஏற்பட்டதையும், விசுவாசிகள் அதிகமாகத் தேவனில் பெலன் கொண்டதையும், புதிய மக்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு மனம் திரும்பியதையும் காணக்கூடியதாய் இருந்தது. இக்கூட்டங்களுக்கூடாக திருமலைப் பட்டணத்தில் வெளிப்பட்ட தேவமகிமையினால் பட்டணமும் மக்களும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இக்கூட்டங்களின் பலனை வரும் நாட்களில் இன்னும் அதிகமாகக் காணத் தேவன் உதவி செய்வாராக. தொடர்ந்தும் இப்பட்டணத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், தேவனையறியாத மக்களின் இரட்சிப்பிற்காகவும் நீங்களும் ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவனுக்கே மகிமை.

அம்பாறையில் 2011, செப்ரெம்பர் 2-4 சுவிசேஷ கூட்டங்கள், விசுவாசிகளுக்கான கருத்தரங்குகள், வாலிபர்களுக்கான கூட்டங்கள்

அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற சுவிசேஷக்கூட்டத்தில் பெரிதான கர்த்தரின் கிரியைகளைக் கண்டோம். இந்த மாவட்டத்திலுள்ள 60 வீதமானோர் முஸ்லிம்களாகவும் மிகுதியானவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் மிகவும் சொற்ப ஜனங்களாகவே இருக்கிறார்கள். அநேக சவால்கள் மத்தியில் வெற்றிகரமான ஒரு சுவிசேஷக்கூட்டத்தை நடத்த கர்த்தர் கிருபை செய்தார். வரலாற்றில் முதல் முறையாக சுவிசேஷக்கூட்டத்தை நடத்தும்படி, பொது மைதானத்தை திறந்து கொடுத்தார்கள். அநேக ஆயிரம் ஜனங்களால் அந்த மைதானம் நிரம்பியது. அநேகர் ஆண்டவர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். அநேக அற்புதங்களும் அடையாளங்களும் நடந்தது.

அம்பாறை நற்செய்திக் கூட்டம்

அம்பாறை மாவட்டத்தில் (கல்முனையில் இருக்கும் பிரதான விளையாட்டு மைதானம் வரலாற்றிலேயே முதற்தடவையாக சுவிஷேசக் கூட்டங்களுக்காகத் திறந்து கொடுக்கப்பட்டது.)

அம்பாறை மாவட்டத்தில் கூட்டம் நடத்தப்பட்ட கல்முனைப் பிரதேசத்தில் முஸ்லிம் மக்களும் இந்துக்களுமே அதிகமாக வாழ்கின்றனர். அதன் நிமித்தம் இப்பகுதிகளில் நற்செய்திக் கூட்டங்கள் நடாத்துவது மிகவும் கடினமாகவே காணப்படுகின்றது. ஆனால் தேவன் ஆச்சரியமாகப் தடைகளை உடைத்து, அப்பட்டணத்தின் பிரதான விளையாட்டு மைதானத்தைத் திறந்து கொடுத்து, முதற்தடவையாக நற்செய்திக் கூட்டங்களை நடாத்தக் கிருபை செய்தார். அம்மைதானம் ஒரு போதும் கிறிஸ்தவக் கூட்டங்களை நடத்துவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அதனைச் சுற்றிலும் இந்துக் கோயில்களும், பள்ளி வாசல்களும் சூழ்ந்து இருப்பதுவே இதற்கு காரணமாகும். இப்படிப்பட்ட அநேக தடைகள் இருந்தாலும் தேவன் அவைகள் மத்தியில் அற்புதம் செய்து, தம்முடைய வல்லமையை வெளிப்படுத்த எமக்கு உதவி செய்தார். முதலாம் நாள் கூட்டத்திலேயே தேவனுடைய பலத்த அசைவைக் காணக்கூடியதாயிருந்தது, சுற்றிலும் இருந்த மக்கள் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டதையும் காணக் கூடியதாயிருந்தது. 2ம் நாளில் தேவன் தம்முடைய அற்புத அடையாளங்களுடன் தம்முடைய பலத்த

திருகோணமலை வாலிபர் கூட்டம்







திருகோணமலை விசுவாசிகள் கூட்டம்





திருகோணமலை நற்செய்திக் கூட்டம்





அம்பாறை நற்செய்திக் கூட்டம்




அம்பாறை வாலிபர்கள் கூட்டம்








அம்பாறை விசுவாசிகள் கூட்டம்









செய்கைகளை வெளிப்படுத்தினார். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட அநேகர் இரட்சிக்கப்பட்டார்கள். கான்சர் வியாதியில் இருந்தும், நடக்க முடியாதவர்களாய் இருந்தவர்களும் நடக்கத் தேவன் கிருபை செய்தார். கட்டிகள் மறைந்தன. அநேகர் அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். தேவன் தம்முடைய பலத்த காரியங்களுக்கூடாகத் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார்.

அம்பாறை வாலிபர்கள் கூட்டம்

இம்மாவட்டத்தில் இருக்கும் வாலிபர்களும் விசுவாசிகளும் யுத்தத்தினால் அதிகமாகப் பலவிதங்களிலும் பாதிக்கப்பட்டவர்கள். அது மாத்திரம் இல்லாமல் இப்பிரதேசம் மந்திரம், பில்லி சூனியம், போன்ற அசுத்த ஆவிகளின் கிரியைகளுக்குப் பெயர் பெற்ற ஓர் இடமாகும், இப்பகுதியில் இருந்தே நாட்டின் பல இடங்களுக்கும் இருளின் அந்தகாரக் கிரியைகள் கடத்தப்படுகிறது. எப்படியாயினும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமை வாலிபர்கள் மேல் இறங்கியபோது, அநேக அசுத்த ஆவிகளின் கட்டுக்களிலிருந்து அவர்கள் விடுதலையாக்கப்பட்டார்கள். மனச்சோர்வினாலும் மனஅழுத்தத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்க காரணமாயிருந்த பிசாசின் பிடியிலிருந்து அநேகர் அற்புத விடுதலையடைந்தனர். விடுதலையாக்கப்பட்ட வாலிபர்கள் யாவரும் தேவனுக்காக ஒரு சேனையாக அபிஷேகத்தின் வல்லமையோடு தேவனுக்கு தங்களை ஒப்புக்கொடுத்தார்கள்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்



இந்த மகளின் மணிக்கட்டிலிருந்த கட்டி ஜெபத்தின் பின்னர் அற்புதமாக மறைந்தது.



பிறவியிலிருந்தே நடக்க முடியாத இச்சிறுவன், ஜெப வேளையின்போது பூரண சுகமடைந்து நடந்தான்.

பொலநறுவையில் ஜெப யாத்திரை – 2011, ஓகஸ்ட் 30





பொலனறுவை மாவட்டமானது இலங்கையின் இருளின் அதிகாரத்திற்குரிய பலவானின் அரண்கள் நிறைந்த ஒரு பட்டணமாய் காணப்படுகின்றது.

இம்மாவட்டமானது, ஹிங்குராகொட, ஜெயந்திபுர, மின்னேறிய, மன்னம்பிட்டிய, வெலிகந்த, கட்டுருவெல ஆகிய சிறுநகரங்கள் சூழ்ந்த ஒரு மாநகரமாகும். போதகர் குழுவினர் இச்சிறுநகரங்களின் வீதிகளுக்கூடாகச் சென்று அப்பகுதிகளை ஆளுகை செய்யும் இருளின் ஆதிக்கத்தையும் பலவான்களின் கிரியைகளையும், வல்லமையும் கட்டி ஜெபித்தார்கள். இம்மாவட்டத்தின் போதகர்கள், இந்த மாநகரத்தை ஆளுகை செய்து, பலவானின் அரண்களையும், ஆவிக்குரிய கிரியைகளையும் அடையாளம் கண்டு, அவற்றை நிர்மூலமாக்குவதற்கான ஜெபத்தை ஏறெடுத்தனர். அதுமட்டுமல்லாமல் பட்டணத்தின் இரட்சிப்பிற்காகவும், பட்டணங்களை ஆளுகை செய்யும் தலைவர்கள், பொலிஸ் திணைக்களம், மற்றும் அரசியல் அதிகாரிகளின் இரட்சிப்பிற்காகவும், அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படவும் பாரத்துடன் ஜெபித்தனர்.

கண்டி ஜெப யாத்திரை – 2011, செப்ரெம்பர் 01




கண்டி மாநகரமானது பிரதேச வாரியாகவும், இருளின் ஆதிக்கம் நிறைந்த தேசத்தின் மத்திய பகுதியாக காணப்படுகின்றது. கண்டி மாவட்டமானது 4 முக்கிய பெருஞ்சந்திகளைக் கொண்டிருக்கின்றது. ஜெப யாத்திரையின்போது, இந்த நான்கு பெருஞ்சந்திகளுக்கூடாகவும் சென்று பட்டணத்தின்மேல் பாதுகாப்பையும், ஆசீர்வாதத்தையும் கூறி, இருளின் ஆதிக்கத்தில் இருக்கும் கண்டி மாவட்டமானது முழு தேசத்திற்கும் ஓர் ஆசீர்வாதமான பகுதியாக மாற்றப்பட ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

இந்த ஜெப யாத்திரையின்போது பாஸ்டர் வின்சன்ட் அவர்கள், இந்த மாவட்டத்திலுள்ள துன்மார்க்கம் அழிக்கப்படுவதற்கும், நீதிமான்கள் பெருகும்படிக்கும், பட்டணத்தில் ஆசீர்வாதம் கடந்து வருவதற்குமான மாவட்டத்தை குறித்த தரிசனத்தை துன்மார்க்கம் அழிக்கப்படும்போது, நீதிமான்கள் பட்டணத்தில் பெருகுவார்கள் என்றும், நீதிமான்கள் பெருகும்போது பட்டணத்தில் மகிழ்ச்சி பெருகும் என்பதைக் குறித்து வெளிப்படுத்தி, ஜெபிப்பதற்கு போதகர்களை ஆர்வப்படுத்தினார். அப்போது போதகர்கள் ஒரு மனத்துடன் பட்டணத்தைக் குறித்த பாரத்துடன் பட்டணத்தைச்சுற்றி தீவிரமாக ஜெபிப்பதற்கு ஆர்வப்பட்டு செயற்பட்டனர்.

கண்டி, பொலநறுவையிலும்..





தேவன் தேசத்தைக் குறித்துக் கொடுத்த தரிசனமானது முழு இலங்கைக்கும் உரியதாயிருக்கிறபடியால், முழு தேசமும் சுவிஷேசத்தினால் மூடப்பட வேண்டும். சிங்கள மக்கள் மத்தியில் அநேகர் ஆண்டவரை அறிந்திருந்தாலும், பெரும்பான்மை சமூகத்தால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் நிமித்தம், பாரிய அளவில் கூட்டங்களை நடத்த முடியாத நிலையே இன்னும் காணப்படுகிறது. எனினும் இரட்சிக்கப்பட்ட சிங்கள மக்கள் தாகத்தோடும் அதேவேளை பல எதிர்ப்புகளின் மத்தியிலும் தேவனுக்காய் வைராக்கியத்தோடு செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் தேவன் கொடுத்த தரிசனத்தை வெளிப்படுத்தியபோது, மிகுந்த ஆர்வத்துடன் சந்தோசத்துடனும் முழுமனதோடு ஏற்றுக் கொண்டார்கள். இதற்குக் காரணம் இப்படியான ஒரு ஜெபயாத்திரை செய்ய வேண்டும் என்னும் பாரம் அவர்களுக்குள் இருந்தது, ஆனால் அதற்குரிய பொருளாதாரமும், செயற்படுத்த முடியாத நிலையும் இருந்தபடியால் அதற்காக ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபை இத்தரிசனத்தோடு சென்றபோது, தங்களின் ஜெபத்தின் பதிலாக எம்மை முழு உள்ளத்துடன் ஏற்றுக் கொண்டார்கள். மாத்திரமல்ல தங்கள் முழு ஒத்துழைப்பையும் பரிபூரணமாகக் கொடுத்து ஊழியத்தில் இணைந்து கொண்டார்கள்.

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி தமிழ், சிங்கள போதகர்கள் ஒன்று கூடி ஜெபித்தபோது, கர்த்தர் பாஸ்டர் வின்சன்ட் அவர்களுக்கு இந்த இருளின் ஆதிக்கங்கள் நிறைந்த இரண்டு நகரங்களையும் குறித்த ஓர் தரிசனத்தை கொடுத்தார். இருளின் அதிகாரங்களை கட்டி பலவானின் கிரியைகளை நிறுத்தும்படிக்கு, இம்மாவட்டங்களில் சென்று ஜெபிப்பதற்கான வழிநடத்தலை தேவனிடத்தில் இருந்து பெற்றுக்கொண்டார்.

பட்டணங்கள் மேல் ஜெபமேகம்

கண்டி, பொலநறுவை இரண்டு பட்டணங்-களும் சிங்கள மக்கள் மத்தியில் புனித நகரங்களாகக் கருத்தப்படுபவை. பிரசித்தி பெற்ற சிங்கள மத வழிபாட்டு ஸ்தலங்கள் அங்கே காணப்படுவதே அதற்குரிய கார-ணமாகும். மாத்திரமல்லாமல் தேசத்தை ஆளுகின்ற ஒவ்வொரு அரச தலைவர்-களும் பதவி ஏற்பதற்கு முன்பாக அங்கு சென்று பௌத்த குருமாரின் ஆசியை பெற்ற பின்னரே, தங்கள் கடமைகளை உத்தியோக பூர்வமாகச் செயற்படுத்துவார்கள். இவ்விதமான புத்தமத தலைமைத்துவம் அரசியல் பின்னணி நிறைந்திருக்கும் இந்தப் பட்டணங்களையே தேவன், ஜெபயாத்திரைக்கு முதலாவதாக தெரிந்து கொண்டார். இங்கேயுள்ள சகல தலைமைத்துவ பெரியோர் தொடங்கி யாவரும், இயேசுவால் இரட்சிக்கப்படுவார்களாக.

ஜெப யாத்திரை முடிவடைந்தபோது, பங்குகொண்டு போதகர்கள், பட்டணத்தைக் குறித்து, சிந்தை புதுப்பிக்கப்பட்டவர்களாக, உற்சாகப்படுத்தப்பட்டவர்களாக, தேவனுடைய இராஜ்யத்துக்காக வைராக்கியம் கொண்டவர்களாக மாற்றப்பட்டதை உணரக்கூடியதாக இருந்தது. அதுமாத்திரமல்லாமல் அவர்கள் உடனடியாக அதுகுறித்து தங்கள் சாட்சிகளையும் பகிர்ந்து கொண்டார்கள்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்

இரண்டாவது கட்டம்

மன்னார் 2012, பெப்ரவரி 10-12 சுவிசேஷ கூட்டங்கள், விசுவாசிகளுக்கான கருத்தரங்குகள், வாலிபர்களுக்கான கூட்டங்கள்









மன்னார் நற்செய்திக் கூட்டம்

மன்னார் பட்டணத்தில் நற்செய்திக் கூட்டம் (மன்னார் பட்டணத்தின் வரலாற்றில் முதலாவதாய் நடாத்தப்பட்ட சுவிஷேசக் கூட்டமும், வாலிபர் கூட்டமும்)

மன்னார் பிரதேசம் இலங்கையின் வட-மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள மக்களில் 90 வீதமான மக்களின் வாழ்வு மீன் பிடித்தொழிலிலேயே தங்கியுள்ளது. கடந்த காலங்களில் காணப்-பட்ட யுத்த சூழ்நிலைகளில் அதிகமாகப் பாதிக்கப்பட்டதும் மன்னார் மாவட்டமே. இம்மாவட்டத்தில் இருக்கும் இளம் வாலி-பர்கள் சிறு வயது முதலே பாடசாலைக்குச் சென்று படிப்பதில் கவனம் செலுத்தாமல், மீன் பிடித்தொழில் செய்வதற்கே பயிற்று-விக்கப்படுகிறார்கள். இப்பட்டணத்தில் நாங்-கள் கூட்டங்களை நடுத்துவதற்கு அனேக தடைகள் ஏற்பட்டன, ஆனாலும் தேவ ஜனங்களின் ஊக்கமான ஜெபத்தின் பல-னாக சகல தடைகளையும் தேவன் உடைத்து கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கத் தேவன் பாதைகளைத் திறந்-தார். நூற்றுக்கணக்கான மக்கள் தங்-கள் வாழ்வைத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்-தார்கள். அநேகர் அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

மன்னார் வாலிபர் கூட்டம்

வாலிபர் கூட்டங்களில் கலந்து கொண்ட அதிகமான வாலிபர்கள் தேவனுடைய வல்லமையால் தொடப்பட்டு தேவனுக்காக வாழத் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். அவர்களைத் தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையால் தாராளமாய் நிரப்பினார். அவ்வாலிபர்கள் மத்தியில் "தேவன் தங்களை தேசம் முழுவதற்கும் சுவிஷேசம் சொல்வதற்கு அழைக்கிறார்" என்கிற பூரண நம்பிக்கை உண்டாயிற்று. தேவனுக்கே மகிமை!



கான்சர் வியாதி குணமடைந்தது.



3 வருடங்களாக இக்குழந்தையின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தபடியே இருக்கும். ஜெப வேளையின் பின்னர் பூரண ஆரோக்கியம் அடைந்து கண்ணீர் நிறுத்தப்பட்டது.



வயிற்றிலிருந்த கட்டி ஜெப வேளையின்போது அற்புதமாக மறைந்தது.



11 வருடங்களாக காணப்பட்ட கட்டி ஜெப வேளையில் அற்புதமாக மறைந்தது.



இந்த சகோதரியின் பெயர் தீர்க்கதரிசன-மாக கூறி முன்பாக அழைக்கப்பட்டு, 3 மாதங்களாக தாங்கமுடியாது வயிற்றுவலியினால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த நிலை உடனடியாக மாறியது.



உம்மால் கூடும் இசைத்தட்டினூடாக உலகம் முழுவதும் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தி வரும் சகோ. Robert Roy – India

தொடர்ச்சி அடுத்த பக்கம்

மன்னார் விசுவாசிகள் கூட்டம்








மன்னார் வாலிபர் கூட்டம்








நுவரெலியா (2012, செப்ரெம்பர் 17-19) சுவிசேஷ கூட்டங்கள், விசுவாசிகளுக்கான கருத்தரங்குகள், வாலிபர்களுக்கான கூட்டங்கள்






நுவரெலியா நற்செய்திக்கூட்டம்


நுவரெலியா மாவட்டமானது இலங்கையின் மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ளது, இங்கு வாழும் மக்களில் 95 வீதமானவர்கள் மிகவும் வறுமையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். தினசரி வாழ்க்கைக்காகத் தேயிலைத் தோட்டங்களில் கூலித்தொழில் செய்து பிழைப்பவர்கள். பலவிதங்களிலும் அரசாங்கங்களினால் கைவிடப்பட்டிருந்தாலும். தேவன் வல்லமையாக அவர்கள் நடுவில் இறங்கி, அவர்களில் வியாதியஸ்தர்களைக் குணமாக்கி, இரட்சித்து தம்முடைய அன்பை வெளிப்படுத்தினார்.

நுவரெலியா வாலிபர்-விசுவாசிகள் கூட்டம்

வரலாற்றில் முதற்தடவையாக மிகவும் அதிகமான வாலிபர்களும், விசுவாசிகளும் கலந்து கொண்ட விசுவாசிகள் கூட்டம் இதுவாகும். இக்கூட்டத்தின்போது, இக்கூட்டத்தில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அபரிமிதமாக அவர்கள் மேல் இறங்கியது. அதன்பலனாக அவர்கள் தேவனுக்காக வைராக்கியம் கொண்டு, தேசத்துக்காக திறப்பில் நிற்க தங்களை ஒப்புக் கொடுத்தார்கள்.



இந்த சிறுமி காது கேளாத நிலையில் கூட்டத்திற்கு வந்திருந்தாள். ஜெப வேளையின் போது பூரண சுகமடைந்தாள்.



இந்த வாலிப மகள், நெஞ்சுவலியிலிருந்து ஜெபத்தினால் சுகமடைந்தார்.



இந்தத் தாயார் தனது கணவனை இழந்த அதிர்ச்சியினால் பேசமுடியாதவராய் இருந்தார். ஜெபத்தின் பின்னர் பேச முடிந்தது



9 வருடங்களாக அசுத்த ஆவியினால் பீடிக்கப்பட்டிருந்த இந்த சகோதரி ஜெபத்தின் பின்னர் விடுதலையாக்கப்பட்டார்.

மன்னார் விசுவாசிகள் கூட்டம்











அநுராதபுரம் ஜெப யாத்திரை – 2012, பெப்ரவரி 14

இலங்கையில் இருக்கும் புத்த வழிபாட்டுத் தலங்களில் அதிகமானவைகள் இப்பட்டணத்திலேயே காணப்படுகிறது. புத்தரின் முதலாவது சீடன் வந்திறங்கியதும் இப்பட்டணத்திலேயே! புத்தமத குருமார்களின் தலைமைக் காரியாலயமும் இங்கேயே இருக்கிறது. இப்பட்டணத்தில் இருக்கும் மக்கள் அதிகமாக புத்த ஆலயங்களை ஸ்தாபிப்பதிலேயே தங்கள் வாழ் நாட்களைக் கழிக்கிறார்கள். மாத்திரமல்லாமல் அதிகமான பாலியல் பாவமும் இப்பட்டணத்திலேயே காணபடுகிறது. அதிகமான வாலிபர்கள் இப்பாவ காரியங்களுக்கு அடிமைப்பட்டிருப்பதால் "பாவ நகரம்" என்றும் இப்பட்டணத்தைக் குறிப்பிடுகிறார்கள்.

அப்பட்டணத்தில் இருக்கும் சகல போதகர்களும் வல்லமையான ஆவிக்குரிய யுத்தம் ஒன்றைச் செய்யக் கூடிவந்தார்கள் ஜெப யாத்திரைக்கூடாக இந்த யுத்தத்தைச் செய்ததன் பின்பு இந்தப் பட்டணத்தில் ஒரு விடுதலை ஏற்பட்டதை உணரக்கூடியதாய் இருந்தது. அப்பகுதியில் ஊழியம் செய்யும் போதகர்கள் கூடி வந்து இந்த ஜெபயாத்திரையை மேற் கொண்டது, ஒரு பெரிய கப்பல் கரை சேர்வதற்கு சிறிய படகு வழி காட்டுவது போல் இருந்தது.

இரத்தினபுரி ஜெப யாத்திரை – 2012, பெப்ரவரி 16

இதன்படி நாம் பார்க்கும்பொழுது கர்த்தர் பாஸ்டர் வின்சன்ட் அவர்களுக்கு கொடுத்த தரிசனம் மிக விரைவில் நிறைவேறும். இலங்கை தேசத்திலுள்ள 25 மாவட்டங்களும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியினாலே நிரப்பப்பட்டு, இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்படும். வரப்போகிற 28 வருடங்களிலே எதிரியான பிசாசின் திட்டங்கள் உடைக்கப்படும். இந்த தரிசனத்தின் ஊடாக இலங்கை தேசமானது சோதோம், கொமோரா போன்ற பட்டணங்களுக்கு ஏற்பட்ட பேரழிவைச் சந்திக்காமல் முழு உலகத்திற்கும் கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணினபடியே இலங்கை தேசம் ஆசீர்வதிக்கப்பட்டு உலகம் முழுவதற்கும் ஓர் ஆசீர்வாதமான தேசமாக நிச்சயமாக மாறும். ஆமென்.

அடுத்த கட்ட மிஷன் பணிக்கான ஜெபக்குறிப்புகள்

இதுவரை இலங்கை தேசத்தின் 8 மாவட்டங்களில் தேவனுடைய தரிசனத்தை நிறைவேற்றி முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். தொடர்ந்து சந்திக்கப்பட வேண்டியிருக்கின்ற 17 மாவட்டங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

3வது கட்ட மிஷன் பணிக்காக 2012, ஒக்ரோபர் மாதத்திற்குள் தீர்மானித்து செயற்படுத்தப்பட வேண்டியுள்ளதினால் அதற்குத் தேவையான பொருளாதார உதவிகள் விரைவில் சந்திக்கப்பட வேண்டியுள்ளது. (ஒரு மாவட்டத்துக்கு சுமார் US$ 7,000.00 அமெரிக்க டொலர்கள் சந்திக்கப்பட வேண்டியிருக்கின்றது.)

அதேசமயம் இதுவரை சந்திக்கப்பட்ட வாலிபர்கள் அனைவரையும் மீண்டுமாக ஒன்றுகூட்டி, அவர்களுக்குள் தொடர்ந்தும் தேவ தரிசனங்களையும் திட்டங்களையும் அனல்மூட்டி, உற்சாகப்படுத்தி, தேசத்திற்கு ஆசீர்வாதமான தலைவர்களாக உருவாக்கி விட வேண்டிய ஓர் பணியும் எமது அடுத்த கட்டப் பணியில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. (2000 வாலிபர்களை ஒன்று சேர்த்து வாலிபர் முகாம் நடத்துவதற்கு 3 நாட்களுக்கு US$10,000 அமெரிக்க டொலர்கள் அவசியமாகின்றது)

மாவட்டங்களுக்குள்ளே சென்று போதகர் ஐக்கியங்களையும், விசுவாசக்குடும்பங்களையும் ஒன்று சேர்த்து தேசத்திற்காக திறப்பில் நிற்கும் சேனைகளாக உருவாக்கி விடுவது அவசியமான ஓர் பணியாக இருக்கின்றது. (இந்தப் பணிக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் US$ 5,000 அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றது.)

கூட்டங்களுக்கான மேடைகள் அமைப்பதற்கு, ஒலி, ஒளியமைப்புகளுக்கு, வரும் ஜனங்களுக்கு பிரயாண வசதிகள், மற்றும் அவசிய செலவுகளுக்கு US15,000 அமெரிக்க டொலர்கள் அவசியமாகின்றது.

எனவே இவை எல்லாவற்றுக்குமாக உங்கள் ஜெபத்திலே எம் மிஷன் பணிகளை நினைத்துக் கொள்ளுங்கள். தேவன் எமக்குத் தந்த தரிசனத்தை நிறைவேற்றுவதற்கு எங்களோடு இணைந்து கரம் கொடுத்து, திறப்பின் வாசலில் நின்று ஜெபத்திலே தாங்கி, எம்மை ஊக்குவிக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தர்தாமே அளவுகடந்து ஆசீர்வதிப்பாராக.

எமது மிஷன் பணிகளைக் குறித்து இன்னும் விபரங்கள் தேவையாயின் எம்மோடு தொடர்புகொள்ளுங்கள் :

416-438-5200 அல்லது 416-289-3662


எங்கள் வங்கி விபரம் :
Bank : TD Canada Trust
Toronto Havest Missioanry Church
A/C No. : 330-5004114
Branch : Toronto, McCowan - Canada

அநுராதபுரம் ஜெப யாத்திரை













இரத்தினபுரி ஜெப யாத்திரை







விடுதலைப் பெருவிழா

ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபையின் 16ம் ஆண்டு நிறைவு விழா

ரொறன்றோ அறுவடை மிஷனரி சபையின் ஒவ்வொரு ஆண்டின் நிறைவிலும் சபையினரால் நடாத்தப்படும் விடுதலைப் பெருவிழாவானது இவ்வருடமும் ஜூலை மாதத்தில் 8,9,10ம் திகதிகளில் சிறப்பாக நடந்து நிறைவேறியது. கடந்த 16 வருடங்களும் கண்ணின் மணி போல் சபையாரையும், ஊழியங்களையும் காத்து வழிநடத்திய தேவனுக்கு நன்றி செலுத்தும்படியாகவே இக்கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகிறது. இந்நாட்களில் திருச்சபையார் யாவரும் கூடிவந்து தேவனை மகிமைப்படுத்தி தேவனுக்குள் களி கூறுவார்கள்.

இம்முறை விடுதலைப் பெருவிழா நாட்கள் பல இனமக்களும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு ஏதுவாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பலநாட்டு மக்களும் வந்து இந்நாட்களில் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இம்முறை தேவ செய்தியைக் கொடுத்து ஜனங்களை ஆசீர்வதிக்கும்படியாக உலகமெங்கும் தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்படும் கானா தேசத்தைச் சேர்ந்த தேவஊழியரும், தீர்க்கதரிசியும், சுவிஷேசகருமான பேர்னாட் ப்ளசிங் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். தேவ சத்தியங்களை அனைவரும் புரிந்து கொள்ளும்படியாக தெளிவாகப் பேசினார்கள். சபையின் உதவிப் பாஸ்டர் ராஜு ஜேசுதாசன் அவர்கள் செய்திகளை தமிழில் மொழி பெயர்த்தார்கள். விடுதலைப் பெருவிழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாயிருந்தது. மக்கள் தேவனுடைய சத்தியங்களையும், தேவன் தம்மைக் குறித்து வைத்திருக்கும் நன்மையான திட்டங்களையும் அறிந்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். மாத்திரமல்லாமல் வந்திருந்த பிற நாட்டு மக்களும் தேவனுடைய அன்பை புரிந்து கொண்டார்கள். சபை மண்டபம் சகல இன மக்களாலும் நிறைந்திருந்ததைக் காணக் கூடியாதாயிருந்தது. அத்துடன் யாவரும் இணைந்து சர்வவல்லமையுள்ள தேவனை உயர்த்தியதைப் பார்க்கும்போது, வேதாகமத்தில் குறிப்பிட்ட "சகல பாஷைக்காரரும கூடி வந்து தேவனைத் துதிப்பார்கள்" என்ற வசனத்தை உறுதிப்படுத்தியது போலிருந்தது. தேவனுக்கே மகிமை உண்டாகுவதாக!



இறுதியாக 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடந்த ஆண்டு நிறைவு விழாவில் தேவன் அநேக காரியங்களைத் தீர்க்தரிசனமாக பேசி வெளிப்படுத்தினார். குறிப்பாக சபையின் தலைமைப் பாஸ்டர் வின்சன்ட் சகாயநாதன் அவர்களைக் குடும்பமாக அழைத்து தேவன் ஆசீர்வதித்தார். இந்தநாட்கள் வரை செய்த ஊழியங்களைப் பார்க்கிலும் வரும் நாட்களில் தேவன் வல்லமையாகப் பயன்படுத்தப்போவதை தீாக்கதரிசனமாக உரைத்தார். இந்நாளில் தலைமைப் பாஸ்டர் அவர்களும் தம்மையும் உடன் ஊழியர்கள் சபையார் யாவரையும் தேவன் கடந்த 16 வருடங்களாகத் தேவன் எவ்விதமாய் பயன்படுத்தினார் என்பதை வந்திருந்த யாவருக்கும் தெரியப்படுத்தி, வழிநடத்திய தேவனுக்கு நன்றி செலுத்தினார். ஊழியப் பாதைகளில் வரும் போராட்டங்களையும், அவற்றில் தேவன் எவ்விதம் உதவி செய்கிறார் என்பதை அறிந்து கொள்வதற்கு அவரின் சாட்சிகள் பெறும் உதவியாகவிருந்தது. தேவன் ஒரு போதும் தம்மைத் தேடுபவர்களையும், தமக்கு ஊழியம் செய்பவர்களையும் கைவிடுவதில்லை என்பதை அவருடைய சாட்சிகள் உறுதிப்படுத்தியது.

அன்றைய ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்ட யாவருக்கும் தேவ ஊழியர் எண்ணெய் பூசி ஜெபித்து ஆசீர்வதித்தார்கள். ஒவ்வொருவரும் தேவனுடைய பரிபூரண ஆசீர்வாதத்தை இந்தப் 16 ஆண்டு நிறைவில் பெற்றுக் கொண்டு மனமகிழ்ச்சியோடு கடந்து சென்றார்கள். தேவன் ஒவ்வொரு வரையும் கரம் தொட்டு ஆசீர்வதித்தார். மாத்திரமல்லாமல் இம்முறை ரொறன்ரோ பட்டணத்தில் இருந்து வந்திருந்த சகல சபைப் போதகர்களையும் மேடைக்கு அழைத்து அவர்களுக்காக விஷேசித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அவர்களும் இணைந்து வந்திருந்த சபை மக்களையும், புதிய ஜனங்களையும் ஆசீர்வதித்தார்கள். இம்முறை சபையின் 16வது ஆண்டு நிறைவானது எமது திருச்சபைக்கு மாத்திரமல்ல ரொறன்ரோவில் உள்ள அனைத்து தமிழ் சபைகளுக்கும் ஆசீர்வாதமாய் அமைந்திருந்தது. சகல மகிமையும் கனமும் தேவனுக்கே உண்டாகுவதாக!.

■ ■ ■



















பிராங்ஃபேர்ட் அறுவடை சபையின்
விடுதலைப் பெருவிழா

இவ்வருடம் ப்ராங்போர்ட் அறுவடை சபை அரம்பித்து 8 ஆண்டுகளைக் கர்த்தருக்குள் பூர்த்தி செய்யத் தேவன் அனுக்கிரகம் செய்தார். ஜேர்மன் தேசத்தில் இப்பட்டணத்தில் இருக்கும் தமிழ் மக்களின் இரட்சிப்பின் மேல் கரிசனை கொண்ட தேவன் தம்முடைய வழிநடத்தலின்படியே 8 வருடங்களுக்கு முன்பு பிராங்க்போர்ட் அறுவடை சபையை ஸ்தாபிக்கக் கிருபை செய்தார்

ஆரம்பித்த நாட்களிலிருந்து இந்நாள் வரைக்கும் புதிய ஆத்துமாக்களை சபையிலே சேர்த்து சபையை பெருகச் செய்திருக்கிறார். அனுதினமும் சபை வளர்ந்து பெருகிக் கொண்டிருக்கிறது. இவ்வருடத்தில் முதன் முறையாக 8வது வருட நிறைவை முன்னிட்டு விடுதலைப்பெருவிழாவை நடத்த தேவன் கிருபை செய்தார். விடுதலைப் பெருவிழாவை நடத்தி சிறப்பிக்கும்படியாக தேவ ஊழியரும் தீர்க்கதரிசியுமாகிய கானா தேசத்தைச் சேர்ந்த பேர்னாட் ப்ளசிங் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். அத்தோடுகூட ரொறன்ரோ அறுவடை சபையின் தலைமைப் போதகரும், ப். அறுவடை சபையின் ஸ்தாபகருமாகிய பாஸ்டர் வின்சன்ட் சகாயநாதன் அவர்களும் ரொறன்ரோவிலிருந்து சென்று கலந்து கொண்டார்கள். மிகவும் விமரிசையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இவ்விசேட கூட்டங்களுக்கு அநேக புதிய ஆத்துமாக்கள் கடந்து வந்திருந்தார்கள். வந்தவர்களுக்கு ஆண்டவரின் அன்பை அறிந்துகொள்ளும்வகையில் இரட்சிப்புக்கேற்ற சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. அநேகருடைய வாழ்க்கையில் ஆசீர்வாதத்தை தடை செய்து கொண்டிருக்கும் காரியங்கள் தீர்க்கதரிசனமாக ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டு தேவ ஊழியரால் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஜனங்கள் அதை ஏற்றுக்கொண்டு தேவன் ஜீவிக்கிறார் என்பதை அறிந்து கொண்டார்கள். ஒப்புக்கொடுத்து முன்பாக வந்தவர்களை கர்த்தர் அபரிவிதமாக ஆசீர்வதித்தார்..

இவ்விதமாக ப்ராங்பேர்ட் அறுவடை சபையின் 8வது நிறைவாண்டு, தேவனுடைய ஆசீர்வாதத்துடனும், பரிபூரண சமாதானத்தோடும் நிறைவு பெற்றது. சபையின் தேவ பிள்ளைகள் யாவரும் தங்களை ஒப்புக்கொடுத்து அதிகமாய் பிரயாசப்பட்டார்கள். தேவன் தாமே அவர்களை ஆசீர்வதிப்பாராக.

■ ■ ■











இந்தியா ஊழியங்கள்



இவ்வருடம் 2012, பெப்ரவரி மாதம் 21ம் திகதி முதல் 24ம் திகதி வரை இந்தியா, சுகஜீவ ஊழியங்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த "வல்லமை முகாம்" மிகவும் ஆசீர்வாதமாக நடந்து முடிந்தது.

தமிழ்நாடு திருப்பத்துார், அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபத்தில் Dr. வி. ஜி. செல்வராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு ரொறன்ரோ அறுவடை மிஷனறி சபையின் தலைமைப் போதகர் பாஸ்டர் வின்சன்ட சகாயநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். கூட்டத்திற்கு வருகை தந்திருந்தவர்கள் தேவ வசனத்தை கேட்டு விசுவாசித்து, நிறைவான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார்கள். கர்த்தர் வல்லமையோடு அந்த இடத்தில் கிரியை செய்து பரிசுத்த ஆவியினாலே ஒவ்வொருவரையும் அபரிமிதமாய் அபிஷேகித்தார். இவ்வூழியங்கள் வளர்ந்து பெருக பாரத்துடன் ஜெபிப்போமாக.

■ ■ ■

பிராங்ஃபேர்ட் அறுவடை சபையின்

ஆசீர்வாத குடும்ப முகாம் - 2011


இம்முறை ப்ராங்பேர்ட் அறுவடை சபையின் ஆசீர்வாத முகாம் வழமைபோல் மிகவும் ஆசீர்வாதமாக நடந்து நிறைவேறியது. வேதாகம கருத்தரங்கு, சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், வேத வினாவிடைப் போட்டிகள் அத்துடன் குடும்ப ஐக்கியத்திற்கான ஆசீர்வாதமாக இம்முகாம் அமைந்தது.

கருடைய ஆத்துமா உயிர்ப்பிக்கப்படத்தக்கதாக வேதாகமத்தின் இரகசியங்களை சபையாருக்கு கற்றுக்கொடுத்தார்கள். பரிசுத்த ஆவியானவர் வேத வார்த்தைகளை புரிந்து கொள்ள ஒவ்வொருவருக்கும் உதவி செய்தார். ஒவ்வொரு கருத்தரங்கின் பின்பும், சபையாரை தேவன் பரிசுத்த ஆவியானவர் அபரிவிதமாக நடத்தினார். இராஜ்யத்தில் இணைந்து கொண்டார்கள்.

மாத்திரமல்லாமல் கற்றுக்கொண்ட வேத அறிவை வெளிப்படுத்தும்படியாக வேத வினாவிடைப் போட்டிகள் நடைபெற்றன. தேவ பிள்ளைகள் ஆர்வமாய் இப்போட்டிகளில் கலந்து கொண்டு, தேவனைக் குறித்த அறிவைக் காண்பித்து சிறப்பித்தார்-யாட்டுக்களிலே ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். இதற்கு மேலாக அறுசுவை உணவுடன் கூடிய ஐக்கியம் ஆசீர்வாத முகாமை மெருகூட்டியது. மொத்தத்தில் இவ்வாசீர்வாத முகாம் ஆவி, ஆத்தும சரீரத்திற்கு கோடை காலத்தின் மிகவும் ஆசீர்வாதமான ஓர் முகாமாக அமைந்தது. தேவ பிள்ளைகள் தங்களை ஒப்புக்-













வேதாகம கருத்தரங்கை நடத்தும்படியாக ரொ. அ. மி. சபை. தலைமைப் போதகர் பாஸ்டர் வின்சன்ட் அவாகளும், கானா தேசத்தைச் சேர்ந்த தீர்க்கதரிசி பேர்னாட் ப்ளசிங் அவர்களும் சிறப்பித்தார்கள். அநே-

தேவ சத்தியங்களை அறிந்து கொள்வதற்கும், கர்த்தருக்குள்ளே பெலப்படுவதற்கும் இக்குடும்ப முகாம் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. தேவனுக்கு தங்களை அர்ப்பணித்தவர்கள் முழுக்கு ஞானஸ்நானம் பெற்று தங்களை தேவ

கள். வெற்றி பெற்றவர்கள் கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். அத்துடன் சிறுவர்களுக்கான உள்ளரங்க விளையாட்டுக்கள் மிகவும் மனமகிழ்ச்சியாக இருந்தது. முகாமில் கலந்து கொண்ட சிறுவர் முதல் பெரியோர் வரைக்கும் இவ்விளை-

கொடுத்து அனைத்து ஏற்பாடுகளையும் நேர்த்தியாக செய்திருந்தார்கள். கர்த்தர்தாமே அவர்களை ஆசீர்வதிப்பாராக.

■ ■ ■









றொறன்ரோ அறுவடை மிஷனறி சபையின் 17வது நிறைவாண்டு
விடுதலைப் பெருவிழா
2012
THMC
விசேட செய்தியாளர் :
இந்தியா, New Life Assembly of God இன் போதகர்
Rev. D. மோகன் அவர்களின் புதல்வரும், தேவனால் வல்லமையாக
பயன்படுத்தப்படும் தேவ ஊழியரும், பாடகருமான
Pastor Chadwick Samuel Mohan
பாஸ்டர் வின்சன்ட் சகாயநாதன்
Senior Pastor, THMC
பாவ சாபத்திலிருந்து விடுதலைபெற்று சமாதானம் பெற அன்புடன் அழைக்கிறோம்
Montreal
ஜுன் 30 சனிக்கிழமை மாலை 6.00 மணி
ஜுலை 1 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி
Toronto
ஜுலை 6 வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணி
ஜுலை 7 சனிக்கிழமை மாலை 7.00 மணி
ஜுலை 8 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி
5797 Boul Gouin Quest,
Montreal, QC
Lawrance - 514-880-5474
Sutha - 514-344-1879
Mahesan - 514-620-8153
1180 Bellamy Road,
Scaroborough
(Bellamy & Progress)
Tel. : 416-438-5200
416-289-3662
www.thmc.net

றொறன்ரோ அறுவடை மிஷனறி சபை



அன்புடன் அழைக்கின்றோம்!!!

தெய்வீக சுகம் பெற்றுக்கொள்ள, தீய பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலை பெற
அசுத்த ஆவியின் கட்டுக்கள் நீங்கி சாப வல்லமைகளிலிருந்து விடுதலை பெற
தேவ ஆவியானவருடைய அபிஷேகமும் ஆசீர்வாதமும் பெற

எமது ஞாயிறு ஆராதனை

பிரதி ஞாயிறுதோறும் காலை 10:30 மணிக்கு
1180 Bellamy Road North, (Bellamy & Progress)
Scarborough, ON

வளர்ந்து வரும் வாலிப சமுதாயத்தை கருத்திக் கொண்டு ஆங்கிலத்திலும் தமிழிலும் எமது ஆராதனை நடத்தப்படுகின்றது.

பிரதி ஞாயிறுதோறும்

காலை 9.30 - 10.20 மணிவரை

சிறுபிள்ளைகளுக்கான ஓய்வுநாள் பாடசாலை
வாலிபர்களுக்கான ஆராதனை - In English (ஆங்கிலத்தில்)
பெரியோர்களுக்கான வேதப்படிப்பு (தமிழ்)

குடும்பமாக கலந்து கொண்டு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இடம்
Toronto Harvest Missionary Church
1180 Bellamy Road North, Scarborough
(Bellamy/ Progress)

ஜெப மண்டபத்தில்

பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் காலை 6.00 மணி தொடக்கம் 7.30 மணிவரையும் காலை 9.30 மணிமுதல் 11.00 மணிவரையும் தேவ பிள்ளைகள் ஒன்றாகக் கூடி ஜெபம் செய்து வருகின்றோம். இதில் நீங்களும் இணைந்து கொள்ள முடியும்.

இடம்
Toronto Harvest Missionary Church
1180 Bellamy Road North
Scarborough
(Bellamy/ Progress)

இராவிழிப்பு ஜெபக்கூட்டம்

மாதத்தின் 2வது வெள்ளிக்கிழமை
இரவு 8.00 மணிமுதல் நள்ளிரவு
12.00 வரை

இடம்
Toronto Harvest Missionary Church
1180 Bellamy Road North
Scarborough
(Bellamy/ Progress)

உபவாசக்கூட்டம்

மாதத்தின் 4வது
சனிக்கிழமை
காலை 10:00 மணிக்கு

இடம்
Toronto Harvest Missionary Church
1180 Bellamy Road North
Scarborough
(Bellamy/ Progress)

எமது கிளைச்சபை ஆராதனைகளும் வீட்டுக் கூட்டங்களும்

பிரதி **வியாழன்** தோறும்	பிரதி **ஞாயிறு** தோறும்	பிரதி **ஞாயிறு** தோறும்
மாலை 7:30 - 9:00 மணிவரை	மாலை 3:00 - 5:00 மணிவரை	மாலை 6:00 - 8:00 மணிவரை
Weston & 401	Hurontario & Dundas	Jane & Finch
11 Cross Street	3085 Hurontario Street, Unit # 207	On 4545 Jane Street
Weston Presbyterian Church	Equity Plaza- Mississauga	**Christian Centre**

வீட்டுக் கூட்டங்கள்

பிரதி வெள்ளிக்கிழமைதோறும் மாலை 7:30 - 9:00 மணிவரை

Scarborough	**Scarborough**	**Scarborough**
Kennedy & Ellesmere	Victorial Park & Sheppard	Morningside & Sheppard
103 Gilroy Drive,	# 206 - 2739 Vict Pk Av.	39 Coyete Street
416-315-6140	**416-492-6522**	**416-282-7000**

வாலிபர்களுக்கான கூட்டம்

பிரதி வெள்ளிதோறும் மாலை 7.30 மணிமுதல் 9.00 மணிவரை

Toronto Harvest Missionary Church
1180 Bellamy Road North
Scarborough

மொன்றியல் அறுவடை மிஷனறி சபை

பிரதி ஞாயிறுதோறும் மாலை 3.00 மணிக்கு

இடம் : 5797 Boul Gouin Quest, Montreal, QC

கடந்த 17 வருடங்களாக றொறன்ரோ பட்டணத்திலே எம் சபையை ஆசீர்வதித்து றொறன்ரோவில் இருக்கும் மக்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றிய கர்த்தர், மொன்றியல் வாழ்மக்களையும் ஆசீர்வதிக்கும்படியாக மொன்றியல் அறுவடை மிஷனறி சபை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

மொன்றியல் வாழ் மக்களை அன்புடன் அழைக்கின்றோம்.
தொடர்புகளுக்கு மொன்றியலில்:
லோறன்ஸ் : 514 880 5474, சுதா : 514 344 1879, மகேசன் : 514 620 8153

மலேஷியா அறுவடை மிஷனறி சபை

பிரதி ஞாயிறுதோறும் மாலை 3.00 மணிக்கு

இடம் : 3C (2nd Floor) Jalan Gigih
25/44, Taman Sri-Muda,
40400, Shal Alam
Selangor D. E. Malaysia

தொடர்புகளுக்கு :
ஜேம்ஸ் : 0164442043, அன்ரூ : 0123209091, டானியல் : 0166857580

THMC

Toronto Harvest Missionary Church's Office

றொறன்ரோ அறுவடை மிஷனறி சபை அலுவலகம்

1180 Bellamy Road, Scarborough, Ontario, M1H 1H2, Canada

அலுவலக நேரம் காலை 9:30 மணி முதல் இரவு 6:30 மணி வரை

தொலைபேசி இல. : 416-438-5200 தொலைநகல் இல. : 416-289-2775
Website : www.thmc.net E-mail : info@thmc.net facebook: pastor vincent

- digi Media -